# தமிழர் பொருண்மியம்

வாரமலர் TAMILS ECONOMY

விலை - 50/= இதழ் - 27 16.07.2023




நெருக்கடிக்குள் ஆடைத் தொழிற்றுறை 02

தரமாகச் செய்யப்படும் உற்பத்திகளுக்கு … 12

நிதி இலக்குகளை அடைய உதவும் …. 18

# நல்லூர்ப் பெருந் திருவிழாவும் இலங்கைப் பொருளாதாரமும்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர … 04

# நெருக்கடிக்குள் ஆடைத் தொழிற்துறை பாதிக்கப்படும் வெளிநாட்டு வருமானம்

**- பார்த்தீபன் -**



இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்கள் எனச் சொல்லப்படும் தென்னை, தேயிலை, இறப்பர் போன்றவற்றுக்கு அடுத்ததாக அதிகளவுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தந்த துறையான ஆடைக் கைத்தொழில்துறை தற்போதைய பொரு ளாதார நெருக்கடியால் ஆட்டங்காண்கின்றது. இதனை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் ஏதாவது அரசாங்கத்திடம் உள்ளதா? என்பதும் பிரதான கேள்வியாக உள்ளது.

ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில்தான் அதிகளவுக்கு ஆடைத் தொழிற்சாலைகள் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டன. இதன்மூலமாக பெருமளவு இளம் பெண்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்கள். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் போன்றவற்றில் அதிகளவு ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இலங்கையில் தயாரிக்கப்படும் ஆடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் நல்ல கிராக்கி இருந்தமையால் இலங்கைக்கு அதிகளவுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் துறையாக ஆடை உற்பத்தித் தொழில்துறை வளர்ச்சியடைந்தது.

2021 செப்டெம்பர் மாதத்தின் பின்னர் ஆடைத் தொழில்துறை பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது. அப்போது இலங்கையையும் ஆக்கிரமித்த கொவிட் பெருந்தொற்றுத்தான் அதற்குக் காரணம். அதற்கு முன்னர் பல தசாப்தங்களாக நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆடைத் தொழில்துறை வழங்கி வந்திருக்கின்றது. நம்பகமான மற்றும் உயர்தர ஆடை உற்பத்தியாளர் என இலங்கை சர்வதேச அரங்கில் நன்கு நிறுவப்பட்ட நற்பெயரைக் கொண்டிருந்தது.

குறிப்பாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் இத்தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. மற்றும் நாட்டின் ஏற்றுமதி வருவாயில் முக்கிய உந்துதலாக இருந்து வருகிறது. இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் பாரம்பரியமாக ஆயத்த ஆடைகள், உள்ளாடைகள், விளையாட்டு உடைகள் மற்றும் தொழில்துறை ஆடைகள்உட்படப்பலதரப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றனர்.

இலங்கை ஆடைத் தொழில்துறையின் வெற்றிக்குப் பல காரணிகள் பங்களித்துள்ளன. பின்வருவன இவற்றில் முக்கியமானவை: அரசாங்க ஆதரவு: வரிச்சலுகைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு முயற்சிகள் போன்ற ஆடைத் தொழிலை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் ஊக்குவிப்புகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப் படுத்தியிருந்தது.

திறமையான பணியாளர்கள்: இலங்கை ஒப்பீட்டளவில் படித்த மற்றும் திறமையான பணியாளர்களைக் கொண்டுள்ளது, குறிப்பாக ஆடை வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகிய துறைகளில். பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதால் தொழில்துறையினர் பயன் அடைந்துள்ளனர்.

நெறிமுறை உற்பத்தி நடைமுறைகள்: நெறிமுறை மற்றும் நிலையான ஆடை உற்பத்திக்கான மையமாக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

> “ பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆடைத் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் ஏற்றுமதி வருவாயில் முக்கிய உந்துதலாக இருந்து வருகிறது. இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் பாரம்பரியமாக ஆயத்த ஆடைகள், உள்ளாடைகள், விளையாட்டு உடைகள் மற்றும் தொழில்துறை ஆடைகள் உட்படப் பலதரப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றனர். ”

பல இலங்கை உற்பத்தியாளர்கள் சர்வதேசத் தொழிலாளர் தரங்களைக் கடைபிடிக்கின்றனர், நியாயமான ஊதியங்கள், பாதுகாப்பான வேலை நிலைமைகள் மற்றும் பொறுப்பான சுற்றுச்சூழல் நடைமுறைகளை உறுதி செய்கின்றனர்.

முக்கிய சந்தைகளுக்கு அருகாமை: தெற்காசியாவில் இலங்கையின் மூலோபாய இடம் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பிற ஆசிய நாடுகள் உட்பட முக்கிய ஆடை இறக்குமதியாளர்களுக்கு வசதியான அணுகலை வழங்குகிறது. இந்த அருகாமை போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கிறது மற்றும் விரைவான திருப்பங்களை செயல்படுத்துகிறது.

இருப்பினும், 2021 இற்குப் பின்னர் கோவிட் பெருந்தொற்று இதற்குப் பெருஞ் சவாலை ஏற்படுத்தியது. அப்போது பல தொழிற்சாலைகள் மூடப்படும் நிர்ப்பந்தம்



ஏற்பட்டது. தற்போது பொருளாதார நெருக் கடி புதிய சவால்களை உருவாக்கியுள்ளது.

சிங்களப் பகுதிகளைப் பொறுத்தவரை யில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில், உயர்தரம் கற்பதற்கு தேவையான பெறுபேறுகள் கிடைக்காவி டின், பெரும்பாலானவர்களின் முதல் தெரிவு ஆடைத் தொழிற்றுறை ஆகத்தான் இருக்கும். சிலர், பரீட்சை நிறைவடைந்த மறுநாளே, ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றுவிடுவர். அந்தள வுக்கு இளம் பெண்களுக்காக ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைகள் குவிந்தி ருந்தன.

உயர்தரத்தில் கற்கவேண்டுமாயின் அதற்குத் தேவையான பணத்தை ஓரளவுக் கேனும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கில், தற்காலிகமாக வேலைக்கு சிலர் இணைந்துகொள்வர். பேறுபேறு கள் போதாவிடின், நிரந்தர ஊழியர்களாகி விடுவர். இந்த நடைமுறை தென்னிலங் கையில் காணக்கூடியதாக இருந்தது.

ஆடைத் தொழிற்றுறையின் ஊடாக இலங்கைக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணி கிடைத்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி இத்துறையி லும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மூலப் பொருட்கள் இறக்குமதி, முடிவுப் பொருள் ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளே, இத்துறை பின்னடைந் தமைக்குப் பிரதான காரணமாக அமைந் துள்ளது.

எனினும், கொவிட் காலத்தில் ஆடைத் தொழிற்றுறையின் செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டமையால், அதிலிருந்து நாட் டுக்குக் கிடைத்த வருமானம், எரிபொருள், உணவுப்பொருட்கள், மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப் பட்டமையை மறந்துவிடக்கூடாது. கொவிட் தீவிடைந்து ஆடைத் தொழிற்சாலைகள் பல மூடப்படும் நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது தான் அது நெருக்கடிக்குள்ளாகியது.

ஆடைத் தொழிற்றுறையில் தைக்கப் பட்ட ஆடைகளுக்கான கேள்வி 18 சதவீத மாகக் குறைந்துள்ளது என்றும் அது 20 சதவீதம் வரையிலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்குலக நாடுகளில் இருந்த கேள்வி, குறைந்துகொண்டே செல்கின்றது. இதனால், ஆடைத் தொழிற் றுறை இழுத்து மூடப்படும் அபாயத்தில் உள்ளதென்ற தகவல் உள்ளது. இது, வறு மைக்கோட்டுக்குக் கீழே வாழும், ஆடைத்



தொழிற்றுறையை நம்பியிருக்கும் குடும் பங்களுக்கு அதிர்ச்சிதரும் தகவல்.

கடந்தகாலங்களைப் போல, சம்பளமும் மேலதிக நேரக்கொடுப்பனவும் கிடைப் பதில்லை. ஆனால், செலவுகள் பன்மடக் காக அதிகரித்துள்ளன. சில ஆடைத் தொழிற்சாலைகளில் முன்னெடுக்கப்பட்டி ருந்த ஊழியர் நலன்சார் திட்டங்கள் முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளன. இத னால், சாதாரண ஊழியர்கள் பாதிக்கப்பட் டுள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்று கொஞ்சமேனும் சம்பாதித்துத் தங்களு டைய குடும்பத்தைக் காப்பாற்றமுடியும் என்று நினைத்த பலரும், அந்த நினைப்பை கைவிட்டு, மாற்றுத் துறைகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித்திருப்பதாகவும் தெரிகின்றது.

இதற்குப் பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. குறிப்பாக இலங்கையில் உற் பத்திச் செலவு அதிகரித்திருக்கின்றது. இலங்கைக்கு போட்டியாக பங்களாதேஷ், இந்தோனேஷியா ஆகியவை. ஆடை உற் பத்தி ஏற்று மதியில் ஈடுபடுகின்றன. மேற்கு நாடுகளின் சந்தைகளில் அவை குறைந்த விலைக்கு கிடைக்கின்றது. அதனால், அந்த நாடுகளில் உற்பத்திகளுக்கு கிராக்கி அதிகரிக்க இலங்கை ஆடைகள் கேள்வி குறைந்த நிலையில் உள்ளன. இதுவும் இலங்கையின் வருமானம் குறைவதற்கு காரணம்.

நாட்டில் எந்தவிதமான பிரச்சினைக ளும் இல்லை வரிசைகள் ஒழிக்கப்பட்டுள் ளன பொருட்களின் விலை அதிகரிப்பு தற்காலிகமானது என்று கூறப்படுவது மக்களின் மனங்களைத் தேற்றும் சொற் களே தவிர, அவை அறுதியானவை அல்ல. மீண்டுமொரு நெருக்கடிக்கு நாடு முகங்கொடுக்கும் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அமெரிக்க டொலரின் பெறுமதியும் குறைந்துகொண்டே செல்கின்றது. இது வும் இலங்கையின் ஏற்றுமதி வருமா னத்தைப் பாதிக்கின்றது. ஆனால், பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை ஆடைத் தொழில் துறைதான் கொடுத்துள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# தெரிவுக்குழு?

பொருளாதார ரீதியாக இலங்கை வங்குரோத்து நிலைமையை அடைந்தது எவ்வாறு என்பதை ஆராயச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன 14 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றைக் கடந்த வாரம் நியமித்தார். இது ஆராயப்பட்டு இதற்குக் காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்தக் குழுவுக்கான உறுப்பினர்களின் நியமனம்தான் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

அதன் தலைவராகச் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். பவித்ரா வன்னிஆரச்சி, டி.வி சானக்க,

விஜித்த ஹேரத், மஹிந்தாநந்த அலுத்கமகே, எரான் விக்கிரமரத்ன, ஜயந்த கெட்டகொட, ஹர்ஷன ராஜகருணா, மேஜர் பிரதீப் உந்துகொட, சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக்க பண்டார கோட்டேக, சாணக்கியன் இராசமாணிக்கம், பேராசிரியர் ரஞ்ஜித் பண்டார ஆகியோர் தெரிவுக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்

இதில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது அதன் தலைவர் நியமனம்தான். தெரிவுக்குழுவின் தலைவராக காரியவசத்தின் பெயரைச் சபாநாயகர் அறிவித்தவுடன், அதை எதிர்த்து எதிர்க்கட்சியினர் சபையில் கூச்சலிட்டனர். காரியவசம், முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவாக இருப்பதுதான் இதற்குக் காரணம். நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுன பெரும்பான்மையைக் கொண்டதாக இருப்பதால், அதில் செல்வாக்குள்ள ஒருவரைக் குழுவின் தலைமைப் பதவிக்கு நியமிப்பது தவிர்க்க முடியாததாகியிருக்கலாம்.

அவரது நியமனத்துக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமைக்குப் பல காரணங்கள் உள்ளன. பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்களில் ஒருவரான பசில் ராஜபக்ஷவின் நம்பிக்கைக்குரிய ஒருவராகக் காரியவசம் உள்ளமை இதற்கு முதலாவது காரணம். பொருளாதார நெருக்கடி இந்தளவுக்கு மோசமடைந்தமைக்குப் பொதுஜன பெரமுனவின் ஆட்சிதான் கார ணம் என்பது பரவலான குற்றச்சாட்டு. அதில் பெருமளவுக்கு உண்மையும் இருக்கின்றது. அதே கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதால், நம்பகத் தன்மையான அறிக்கை ஒன்றை அவர்களிடமிருந்து எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்பது நியாயமான ஒரு கேள்விதான்!

பசில் ராஜபக்ஷ, அவரது சகோதரரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகக் கடமையாற்றியதோடு, மற்றொரு சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகியபோது நிதி அமைச்சராகவும் பணியாற்றியவர். அவர் மீது பெருமளவு ஊழல் குற்றச்சாட்டுக்கள் எதிரணியினரால் முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வளவும் இருக்க பசில் ராஜபக்ஷவின் நெருங்கிய நம்பிக்கைக்குரிய ஒருவரை இந்தப் பொறுப்புக்கு நியமித்திருப்பது அதன் மீதான நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்குவதாகவே உள்ளது!

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## இஞ்சிப் பயிச்செய்கை

வடபகுதியில் இஞ்சி விலை உச்சத்தைத் தொட்டிருக்கும் நிலையில் இஞ்சிப் பயிர்ச்செய்கை குறித்து கடந்த வார தமிழர் பொருண்மியம் வார இதழில் நீங்கள் வெளியிட்டிருந்த கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இஞ்சி பயிரிடுவது எவ்வாறு, அதிலிருந்து எவ்வாறு அதிகளவுக்கு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பன தொடர்பாக அதில் விரிவாக விளக்கப்பட்டிருந்தது சிறப்பு. வீடுகளில் கூடச் சிறிய அளவில் இஞ்சியைப் பயிரிட்டு வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டால்கூடப் பெருமளவு செலவீனத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இஞ்சித் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கும் அதுதான் வழி. வீட்டுத் தோட்டம் செய்பவர்களும் கண்டிப்பாக இஞ்சிப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

**சுகந்தினி கார்த்திகேசு. வவுனியா.**

## இரண்டாவது வேலை?

தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு வழமையான வேலையில் கிடைக்கும் வருமானம் போதாது என்ற நிலையில் தான் பெரும்பாலானவர்கள் திண்டாடுகின்றார்கள். இந்த நிலையில் பகுதி நேர வேலை ஒன்றை அனேகமாக அனைவருமே தேடுகின்றார்கள். இது தவிர்க்க முடியாத ஒன்றுதான். இரண்டாது வேலைக்குப் பதிலாக அதிகளவுக்கு றிஸ்க் எடுக்காமல் ஒரு தொழில்முனைவோராவதற்கு என்ன செய்யலாம் என்பதை மிகவும் இலகுவான முறையில் கடந்த வார இதழில் வெளிவந்திருந்த எலிசபெத் என்பவரின் கட்டுரை அமைந்திருக்கின்றது. குறிப்பாகப் பெண்கள் சிறிய அளவில் தொழில் முனைவோராவதற்கான நுட்பங்கள் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. சொந்தமாகத் தொழில் தொடங்க விரும்புவோருக்குப் பயனுள்ள ஒரு கட்டுரை.

**சந்திரவதனா சின்னத்தம்பி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி –

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - -------------------------------------------------

**முகவரி** - -------------------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ---------------------------------

**சந்தாக் காலம்** - -------------------------------------------

**செலுத்திய தொகை** - --------------------------------------

**செலுத்திய திகதி** - ---------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,59,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,74,350 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 300/= |
| உருளைக்கிழங்கு | - 240/= |
| பச்சைமிளகாய் | - 800/= |
| தக்காளி | - 600/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 250/= |
| கோவா | - 300/= |
| கரட் | - 360/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 180/= |
| வாழைக்காய் | - 160/= |
| சின்ன வெங்காயம் | - 420/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 500/= |
| வெண்டிக்காய் | - 240/= |
| கருணைக்கிழங்கு | - 200/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 360/= |
| பீற்றூட் | - 420/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 500/= |
| போஞ்சி | - 550/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** செயற்கை நுண்ணறிவின் வருகையால் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புப் பாதிக்கப்படும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதில் உண்மையுள்ளதா?

**பதில் -** தொழில் நுட்ப வளர்ச்சி என்பது வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்று. மனித வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்கும் அது அவசியமானதுதான். உலகத்தை இன்று உள்ளங்கைக்குள் கொண்டுவந்திருப்பதும் இந்தத் தொழில்நுட்ப வளர்சிதான். சனத்தொகை அதிகரிப்பின்போது எழக்கூடிய அதிகரித்த தேவைகளை நிறைவு செய்வதற்குத் தொழில்நுட்பம் அவசியமாகின்றது. அதனால், தொழில்நுட்பம் எப்போதும் வளர்ச்சியடைந்துகொண்டே செல்லும்.

இதன் உச்சகட்டமாகத்தான் இன்று ஏ.ஐ. எனச் சொல்லப்படும் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியைப் பார்க்க முடியும்.

கணினி போன்ற சாதனங்களால் தாமாக எந்த வேலையையும் செய்ய முடியாது. அதாவது மனிதன் எவ்வாறு சிந்திப்பான், செயற்படுவான் என்பதை நிரலாக்க குறியீடுகளாக வைத்துக் கொண்டு கணினி செயல்படும். செயற்கை நுண்ணறிவு என்பதை மனித நுண்ணறிவை உருவகப்படுத்தும் செயல்முறைகளில் திட்டவட்டமான முடிவுகளை அடைவதற்கான பாதையாகச் சொல்லலாம்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, பிழைகளைக் குறைக்க உதவுகிறது. அதிகளவு துல்லியத்துடன் செயற்படக்கூடிய தன்மையை ஏற்படுத்தித் தந்துள்ளது. இதனால்தான் பெரும்பாலானவர்கள் இன்று செயற்கை நுண்ணறிவைத் தமது வேலைகளுக்குத் துணையாகப் பயன்படுத்துகின்றார்கள்.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, இன்று அனைத்துத் துறைகளிலுமே பரவிக் கிடக்கின்றது. விவசாயத் தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல் என எல்லாத் துறைகளிலுமே பயன்படுத்தப்படுகின்றது.

பொழுதுபோக்குக்காகவும் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்,

இன்று மனித வளத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. செயற்கை நுண்ணறிவு காரணமாக அனைத்துத் துறைகளிலும் ஒரு புதிய மாற்றம் வந்து முன்னேற்றம் அடைந்தாலும் கூட, இதன் வளர்ச்சி காரணமாக வேலை வாய்ப்பு ஐம்பது சத வீதத்தினால் குறையலாம் என்ற எச்சரிக்கையையும் புறக்கணித்துவிட முடியாது.

தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் ஒவ்வொரு கட்டத்திலும், தொழில்கள் இலகுவாக்கப்படும். மறுபக்கத்தில் பலருடைய வேலைகள் அதனால் பாதிக்கப்படுகின்றன. அது தவிர்க்க முடியாத ஒன்றும் கூட.

செயற்கை நுண்ணறிவு மனிதர்களால் எடுக்கப்படும் முடிவுகளைவிடத் துல்லியமான முடிவுகளை எடுக்கக்கூடியவையாக வளர்ச்சியடைந்திருப்பதுடன், அந்த முடிவுகளை விரைந்து எடுக்கக்கூடியதாகவும் இருக்கின்றன. அதனால் வர்த்தக நிறுவனங்கள், அரசாங்கங்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு நிச்சயமாக முன்னுரிமை கொடுக்கும்.

இதனால், உருவாகக்கூடிய வேலை வாய்ப்புப் பிரச்சினையை எவ்வாறு கையாள லாம் என்பதற்கான உபாயங்களைக் கண்டறிவதும் எமது பொறுப்பாகும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 208/= |
| கனடா டொலர் - | 232/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 324/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 230/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 399/= |
| சுவிஸ் பிராங் - | 353/= |
| அமெரிக்க டொலர் - | 308/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 220/= |
| கனடா டொலர் - | 246/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 360/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 243= |
| ஸ்ரோலிங் பவுண் - | 420/= |
| சுவிஸ் பிராங் - | 375/= |
| அமெரிக்க டொலர் - | 321/= |

# எம்மிடமிருந்த மீள்சுழற்சி முறைகள் காணாமல் போனது எப்படி?

- வடகோவை வரதராஜன் -



ஏன் சுற்றுச்சூழல் தினம் அனுட்டிக்கப்படுகிறது எவ்வாறு சூழல் நஞ்சாகிறது என்பதையும் எம்மளவில் சூழல் மாசுபடுதலைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதையும் பார்த்தோம். மேலும் எவ்வகையில் சூழல் மாசுபடுதலை தவிர்க்க நாம் என்ன செய்யலாம் என்பதை பார்ப்போம்.

பிளாஸ்டிக்கின் மீள்சுழற்சியை பார்க்கு முன் முன் எங்களிடம் இருந்த சில மீள் சுழற்சி முறைகளைப் பார்ப்போம்.

1) 1980 களில் நீர்வேலியில் ஓயஎல கண்ணாடித் தொழிற்சாலை என்று ஓர் பெரிய தொழிற்சாலை இருந்தது . கரம்பனைச் சேர்ந்த Xavier என்பவர் கோப்பாயில் குடியேறி இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினார் .

பட்டப்படிப்புகள் எதுவும் அற்று ,சாதாரண வியாபாரக் குடும்பத்தில் இருந்து வந்தவரே சேவியர். ஆனால் அவரிடம் புதிய சிந்தனைகள் இருந்தன.

மீள்சுழற்சியே அவரின் கனவாக இருந்தது. வீட்டுக்கு வீடு, தெருவிற்கு தெரு, சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தலாய் இருந்த, உடைந்த கண்ணாடித் துண்டுகள் எல்லாவற்றையும் நல்ல விலை கொடுத்து வாங்கினார் சேவியர். பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இந்த உடைந்த பிசுங்கான்களைப் பொறுக்கிச் சீவித்தன.

மோட்டார் வண்டி திருத்துமிடங்களிலும் Service station களிலும் கழிவாகா வெளியே ஊற்றப்பட்டு நிலத்தடி நீரை மாசுபடுத்திய கழிவு ஒயிலை நல்ல விலை கொடுத்து வாங்கினார். இந்தக் கழிவு ஒயிலுடன் மண்ணெண்ணையைக் கலந்து அமுத்தத்துடன் எரிபோறணையில் சிவிறி (spray) நீலச்சுவலையுடனான அதிவெப்பதைப் பெற்றார்.

இந்த அதிவெப்பத்தில் உடைந்த போத்தல் துண்டுகள் உருகி, திரவநிலையை அடைந்தன. இந்த உருகிய கண்ணாடிக் குழம்பை இரும்புக் குழாய்களால் தொட்டு, மனிதர்கள் தம் வாயால் அதை ஊதி அசுக்களில் இட்டு அரிகன் லாம்புச் சிமினிகள், மேசை விளக்குச் சிமினிகள், நீர் மொண்டு வைக்கும் குடுவைகள், தேனீர்க் குவளைகள், அழகிய கண்ணாடி ஜொக்குகள் என்பனவற்றைச் செய்தார்கள்.

இலங்கை பூராவும் show room வைத்து இவை அமோகமாக விற்பனையாகிப் பெரும் இலாபம் பெற்றுக்கொடுத்தன.

பல நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் இங்கே 4 shift இல் வேலை செய்தனர். 24 மணித்தியாலமும் தொழிற்சாலையின் கொதியுலை கொதித்துக் கொண்டே இருந்தது. சுறுசுறுப்பான ஒரு தேனிக் கூடுபோல் அந்தத் தொழிற்சாலை இயங்கியது. வீடுகளிலும் தெருவிலும் கிடந்து காலைப் பதம்பார்த்த பிசுங்கான் துண்டுகள் காணாமல் போயின.

நிலத்தடி நீரை மாசுபடுத்திய களிவு ஒயில் எரிபொருளாக மாறி உற்பத்தியைக் கொடுத்தது.

சேவியரில் உள்ள இன்னுமோர் காருண்ய குணம், மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை கொடுத்துச் சம்பளமும் கொடுத்தார். வீடுகளில் முடங்கி வெதும்பிய மாற்றுத்திறனாளிகள் சம்பளம் பெற்று நெஞ்சை நிமிர்த்தினார்கள்.

இங்கே packing material ஆக வைக்கோலும் பழைய பேப்பருமே பயன்படுத்தபட்டன. சூழலை மாசுபடுத்திய இவை இரண்டும் தொழிற்சாலை மூலப் பொருட்களாகின. தொழற்சாலை வளர, நாகர்கோவிலில் இருந்து சிலிக்கா நிறைந்த மண்ணை எடுத்து அதில் இருந்து கண்ணாடி தயாரிக்கும் முயற்சி பரிசீலிக்கப்பட்டது.

என்ன காரணத்தாலோ இந்த மண்ணில் இருந்து கண்ணாடி தயாரிக்கும் முயற்சியைச் சேவியர் கைவிட்டுவிட்டார். மனிதர்களுக்கு வேலை போய் விடுமே என்று இயந்திரத்தால் கண்ணாடிக் குழம்பை ஊதும் திட்டத்தையும் சேவியர் நடைமுறைப் படுத்தாமல் விட்டிருக்கலாம்.

எவ்வளவு அருமையான சிந்தனை சேவியரிடம் இருந்தது. கழிவுகள் மீள் சுழற்சியாகி அவருக்கு பணம் கொடுத்தது மட்டுமல்ல, நாடு பிசுங்கான் அற்ற அழகிய நாடானது.

1990 களில் இந்த தொழிற்சாலை மீது விமானம் குண்டு வீசியதைப் கோப்பாய் வயல் வெளியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்போது யோசித்தேன் யாழ்ப்பாணம் இனி பிசுங்கான்களால் நிரம்பும் என்று. அதே போல இன்று தெரு நிறைய உடைந்த சாராயப் போத்தல்கள்.

சேவியரின் தம்பி அன்ரன் என்பவர் இருபாலையில் ஒரு Tshirt தொழிற்சாலையும் துணிகளுக்குச் சாயமிடும் தொழிற்சாலையும் வைத்திருந்தார். இங்கே நிறம் மங்கிய பழைய உடுப்புகள் சாயமிடப்பட்டு பளபளப்பான புதிய உடுப்புகளாக உரு மாறின.

இன்றைய Throw away culture எல்லாவற்றையும் பயன்படுத்தியப் பின் குப்பைகளாக அள்ளி வீசுகிறது. கோபிரேட்டுகள் மெல்ல மெல்ல மக்களை நுகர்வுக் கலாச்சாரத்திற்கு மாற்றி விட்டார்கள்.

சேவியர் போல, அன்ரன் போல சமுதாயத்திற்காக சிந்திக்கின்ற ஒரு தொழிலதிபரை ஏன் இப்போது பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது?

யாழ்ப்பாணத்தைக் கட்டிடக் காடாக மாற்றுகிற புலம் பெயர்ந்த தமிழர்கள். தம் நாட்டுக்காக ஏன் இப்படிச் சிந்திக்கவில்லை?

முகநூல் பொங்குதலுடன் எமது கடமை முடியப் போகிறதா?

முள்ளிவாய்க்கால் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு தொழில் வளம் காட்டாமல், தொடர்ந்து முகநூலில் சுடரேந்தல் மட்டும் செய்து கொண்டிருக்கப்போகிறோமா?

வந்து குவிகின்ற பொலித்தீனையும் பிளாஸ்டிக்கையும் மறுசுழற்சி செய்யும் ஒரு தொழிற்சாலையைப் புலம்பெயர் அமைப்புகள் உருவாக்கி எமது தேசத்தை அழகுபடுத்தினால் என்ன?

# வரி விளம்பரம் classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...
தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------




### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

-------------------------------------



### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# பொருண்மியம் விருதுகள் - 2023



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் "கிரீன் மீடியா" நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழா பொருண்மியம் நடத்தும் "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவாகள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்.

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர். தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 20.07.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**



# நல்லூர்ப் பெருந் திருவிழாவும் இலங்கைப் பொருளாதாரமும்

**யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் பொருளாதாரத்திற்கு பல வழிகளில் கணிசமான பங்களிப்பை வழங்குகிறது. திருவிழாவின் தாக்கம் அதன் கலாச்சார மற்றும் மத முக்கியத்துவத்திற்கு அப்பாற்பட்டது, உள்ளூர் மற்றும் தேசிய அளவில் பொருளாதார நன்மைகளை உருவாக்குகிறது.**



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

உலகில் ஒவ்வொரு நாடும் தனது பொருளாதாரம் மற்றும் நாட்டு மக்களின் நன்மைகளினைக் கருத்திற்கொண்டு பல்வேறு செயற்பாடுகளினைத் தொடர்ச்சியாகச் செய்துவருவதனை நாம் பார்த்து வருகின்றோம்.

உதாரணமாக உலகக் கோப்பை Cricke, Foot Ball, Olympics போன்ற பெரிய அளவிலான நிகழ்வினை ஒவ்வொரு நாடும் தனது நாட்டினில் நடத்துவதற்கு போட்டி போட்டுக்கொண்டு முன்வருவதனை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதற்கு மிகமுக்கிய காரணமாக இருப்பது அவ்வாறு நடாத்தும் எந்தவொரு நாட்டிக்கும் ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுகமான பல்வேறு பொருளாதார நன்மைகள் ஆகும்.

அதேபோல ஒவ்வொரு வருடமும் எமது அழகிய இலங்கை நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் கடவுளே அருள்பாலித்துக் கொடுத்திருக்கும் ஒரு சிறந்த வாய்ப்பே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மற்றும் அதன் திருவிழாவும் ஆகும். இதுவே முதலிடத்தினைப் பெறுகின்றது.

நல்லூர்க் கந்தன் திருவிழா நடைபெறுவதற்கு முன்னைய மற்றும் பின்னைய காலத்தினை ஒட்டியே ஏனைய பல கோவில்களின் திருவிழாக்களும் வருகின்றன. உதாரணமாக நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திருவிழா, சன்னதி முருகன் ஆலயத் திருவிழா, வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழா எனக் கூறிக் கொண்டே போகலாம். அதுமட்டுமல்லாது நல்லூர்க் கந்தன் திருவிழா நடைபெறும் காலங்களில் அந்தக் கந்தன் அருளால் சிறந்த காலநிலையும் அமைந்துவிடும். அதிக வெய்யிலோ மழையோ இல்லாமல், மக்களின் இயல்பு வாழ்விற்கு ஏற்றதாக அமையும் ஒரு சிறந்த காலமாக இருப்பதனையும் நாம் காலாகாலமாகக் கவனித்து வருகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் கடந்த பல தசாப்தங்களாக ஏதோ ஒருவகையில் பல்வேறுபட்ட துன்பங்களினை அனுபவித்து வந்தே உள்ளோம். அப்படிப்பட்ட எங்களெல்லோரையும் தட்டிக்கொடுப்பதற்காகவே இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா அமைகின்றது. இப்படிப்பட்ட ஒரு மிகச்சிறந்த அருமையான சந்தர்ப்பத்தினை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் வாயிலாக பல்வேறுபட்ட நன்மைகளினை நாம் நிச்சயமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் வடபகுதியில் பிரமாண்டமாகக் கொண்டாடப்படும் ஒரு மிக முக்கியமானதும், கலாச்சார முக்கியத்துவமும் வாய்ந்த




நிகழ்வாகும். முருகப் பெருமானுக்கு அர்ப் பணிக்கப்பட்ட இந்தப் பண்டிகைக்கு இலங் கையிலிருந்து மட்டுமல்லாது வெளிநாடுக ளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர் கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஆன்மீக மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்கு அப்பால் உள்ளூர் மற்றும் தேசியப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இத்திருவிழா மாபெரும் பங்கு வகிக்கிறது. யாழ்ப்பாணம் நல் லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினால் ஏற்பட்ட / ஏற்படுகின்ற பல்வேறு பொருளாதார நன்மைகளை பின்வருமாறு ஆராயலாம்.

**1. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில்**

இவ்விழா இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந் தும் சகலரையும் ஈர்க்கும் ஒரு முக்கிய சுற்றுலா அம்சமாகச் செயல்படுகிறது. திரு விழாவின்போது பெரும் ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சமயச் சடங்குகள் ஆகியவற்றைக் காணச் சுற்று லாப் பயணிகள் குறிப்பாக யாழ். சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பி னால் தங்குமிடம், போக்குவரத்து, உணவு மற்றும் சுற்றுலா தொடர்பான பிற சேவைக ளுக்கான தேவைகளை அதிகரிக்க வழி வகுக்கிறது.

இதன் விளைவாகக் ஹோட்டல்கள், கெஸ்ட்ஹவுஸ்கள் மற்றும் தனியார் தங்கு மிடங்களுக்கும் அதிகத் தேவையும் அத னால் அதிகரித்த கேள்வியும் ஏற்படுவதனை காணலாம். இதன் விளைவாக இந்தத் திருவிழா சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிவருவதுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகிறது.

**2. உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம்**

திருவிழாவின் போது, நல்லூர்க் கந்த சுவாமி கோவிலைச் சுற்றியுள்ள தெருக்கள் பரபரப்பான சந்தைகளாக மாறும். ஏராள மான விற்பனையாளர்கள் தற்காலிக கடை களை அமைத்து கலைப்பொருட்கள், பாரம் பரிய ஆடைகள், கைவினைப்பொருட்கள் மற்றும் உள்ளூர்ச் சுவையான உணவு கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

இந்தத் துடிப்பான பொருளாதாரச் செயற்பாடு உள்ளூர் தொழில் முனை வோர் மற்றும் சிறு வணிகங்கள் தங்கள் தயாரிப்புக்களைக் காட்சிப்படுத்தவும் வரு மானத்தை ஈட்டவும் ஒரு தளத்தை வழங் குகிறது. இந்தப் பெரும் திருவிழா உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் ஊக்கமாகச் செயற்படுகிறது. ஏனெனில் அதிகரித்த மக்களின் தேவைகள் யாழ்ப்பாணம் மற் றும் அதைச் சுற்றியுள்ள வணிகங்களுக்கு அதிக விற்பனை மற்றும் இலாபமாக அமைகிறது.

**3. வேலை வாய்ப்புக்கள்**

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவினால் அந்தப் பகுதியில் வசிக்கும் தனிநபர்களுக்கு தற் காலிக வேலை வாய்ப்புக்கான குறிப்பிடத் தக்க ஆதாரமாக விளங்குகிறது. இந்த நிகழ்விற்குத் தளபாடங்கள், பாதுகாப்பு, சுகாதாரம், கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை நிர்வகிப்பதற்குப் பரந்த பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

நிகழ்வு மேலாண்மை, போக்குவரத்து, கேட்டரிங் மற்றும் சில்லறை விற்பனை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்காலிக வேலைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த வேலை வாய்ப்புக்கள் ஏராளமான தனிநபர்களுக்கு (குறிப்பாகக் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு) வாழ்வாதாரத்தை வழங்குகின்றன.

திருவிழாவினால் வேலைவாய்ப்பில் ஏற்படும் நேர்மறையான தாக்கம், வறுமைக் குறைப்புக்கு மேலும் பங்களிப்பதோடு உள்ளூர்ச் சமூகத்தின் ஒட்டுமொத்த சமூ கப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்து கிறது.

**உட்கட்டமைப்பு மேம்பாடு**

திருவிழாவின்போது பெருமளவிலான பார்வையாளர்களின் வருகைக்கு இடம ளிக்கும் வகையில் நல்லூர் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ச் சியான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் தேவை ஏற்படுகின்றது. திருவிழாவில் பங்கேற் பவர்களுக்கு ஒரு மென்மையான மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை உறுதி செய்ய மேம்படுத்தப்பட்ட சாலைகள், வாகனத் தரிப்பிட வசதிகள், துப்பரவு அமைப்புகள் மற்றும் பிற வசதிகள் போன் றன அவசியமாகின்றன.

இப்பகுதியின் ஒட்டுமொத்த உட்கட்ட மைப்பை மேம்படுத்துவதில் அரசாங்கமும் உள்ளூர் அதிகாரிகளும் முதலீடு செய்வ தால் இந்த விழா உட்கட்டமைப்பு மேம்பாட் டுத் திட்டங்களுக்கு ஊக்கியாகச் செயல்படுகி றது. இந்த முதலீடுகள் திருவிழாவிற்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், உள்ளூர் சமூகம் மற்றும் எதிர்காலச் சுற்றுலா வாய்ப் புகளுக்கு நீண்டகால நேர்மறையான தாக்கங்களையும் கொண்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

# தரமாக செய்யப்படும் உற்பத்திகளுக்கு விளம்பரங்கள் தேவைப்படுவதில்லை

நேர்கண்டவர் - ஞா.கவினி

**"ஒவ்வொரு தனிநபருக்கும் ஒவ்வொரு தனித்துவமான திறமை நிச்சயமாக இருக்கும். அந்தத் திறமைகளுக்கு ஏற்ப அவர்கள் தொழிலையும் அமைத்துக் கொள்ளும்போது அர்ப்பணிப்புடனும் ஆத்மார்த்தமாகவும் அந்தத் தொழிலில் ஈடுபடுவதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்து விடுகிறது. கண்களால் காண்பவற்றை கலைப் பொருட்களாக மாற்றுவது என்பது ஒரு சிறந்த கலை."**




## கைத்தொழில் முயற்சியாளர் ஜெயந்தினி சாம்ராஜ்



யாழ்ப்பாணம் இராமநாதன் அழகியல் கலைப் பீடத்தின் (BFA) பட்டதாரியும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் அலுவலருமான கைத்தொழில் முயற்சியாளர் மற்றும் வழிகாட்டுநர் ஜெயந் தினி சாம்ராஜ் தமிழர் பொருண்மியம் வார இதழுக்கு அளித்துள்ள நேர்காணல்

சிறு வயது முதலே கலைப் பொருட்கள் மீதான ஆர்வம் எனக்கு இருந்தது. பாடசாலைக் காலங்களிலேயே இத்தகைய கலை பொருட்களைச் செய்வதை விரும்பினேன்.

நான் நினைக்கிறேன் தரம் 11 கல்வி கற்கின்றபோது இந்த ஆர்வத்தின் முதற்கட்டமாக நான் கைவினைப் பொருட்களை உருவாக்க ஆரம்பித்தேன். அப்போது எனக்கு இருந்த கல்வி சூழல் இக்கலையை நான் தொடர்வதற்கு எனக்கு மிகவும் ஆதரவாக இருந்தது. சிறுவயதிலிருந்தே துர்க்கை அம்மன் மகளிர் இல்லத்தில் மாணவியாக இருந்ததனால் இந்த அழகான சூழல் எனக்கு வாய்க்கப் பெற்றது எனலாம். நான் எத்தனை இடர்கள் வந்தாலும் இந்தக் கலையை மிகவும் தீவிரமாக நேசிக்கிறேன். இந்தக் கலை மீதான ஆர்வம் தான் என்னை இந்தத் தொழில் துறையைத் தெரிவு செய்வதற்கும் பெரிதும் காரணமாய் இருந்தது.

ஒவ்வொரு தனிநபருக்கும் ஒவ்வொரு




தனித்துவமான திறமை நிச்சயமாக இருக்கும். அந்தத் திறமைகளுக்கு ஏற்ப அவர்கள் தொழிலையும் அமைத்துக் கொள்ளும்போது அர்ப்பணிப்புடனும் ஆத்மார்த்தமாகவும் அந்த தொழிலில் ஈடுபடுவதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்து விடுகிறது. கண்களால் காண்பவற்றைக் கலைப் பொருட்களாக மாற்றுவது என்பது ஒரு சிறந்த கலை.

### வளங்களும் சந்தை வாய்ப்பும்

உள்ளூரில் கிடைக்கும் வளங்களை வைத்துக்கொண்டு சிறிய முதலீட்டில் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் செலவழித்து நாங்கள் உருவாக்கும் இந்தக் கலைப்படைப்புக்கள் முடிவுப் பொருளாகும்போது பலரது கவனத்தையும் ஈர்க்கின்றது. தற்போது இறக்குமதிகளையும் நெகிழிப் பொருட்களையும் விரும்பாத சமூகமொன்று உருவாகி வருகின்றது. அத்தகையோர் எமது கலை வண்ணங்களை மிகவும் இரசனையுடன் வாங்கிச் செல்கின்றனர். உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் இத்தகைய கலைப் படைப்புகளுக்குப் பெரும் வரவேற்பு இருக்கிறது.

தற்போதெல்லாம் கைவினைப் பொருட்களுக்கு என்று தனியே வியாபார நிலையங்களையும், காட்சியறைகளையும் ஆரம்பிக்கிறார்கள். எல்லாமே வியாபார நோக்கமாகப் பார்க்கப்படுவதனால் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்கள் எல்லாவற்றையும் உங்கள் திறன்கள் மூலம் பணமாக மாற்றிக் கொள்ளலாம். சந்தைப்படுத்தல் இப்போது ஒரு பெரிய பிரச்சினையாகச் சொல்லப்படுவதற்கு இல்லை. ஏனெனில் சிறு கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் வாராந்த, மாதாந்த சந்தைகளும் சிறப்பு வழிகாட்டல்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்தோடு சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப தரமாகச் செய்யப்படும் எந்த உற்பத்திக்கும் பெரிதாக விளம்பரங்கள் தேவைப்படுவது இல்லை.

ஏற்கனவே உங்களிடம் உள்ள வாடிக்கையாளர்களே உங்களுக்கான விளம்பரதாரராகவும் உள்ளார்கள் என்பதை நாங்கள் உணர வேண்டும். இயற்கை அள்ளித் தந்திருக்கின்ற வரங்களை கொஞ்சம் கற்பனைக் கண்களோடு நோக்கினால் போதும் நீங்கள் பெரும் முயற்சியாளர்களாகவும் வியாபாரிகளாகவும் உருவாகி விடலாம். நீங்கள் உற்பத்தி செய்வதோடு மாத்திரமன்றி இன்னும் உற்பத்தி செய்பவர்களின் பொருட்களை வாங்கவும் விற்கவும் கூட முடியும். தற்போதைய நவீன யுகத்தில் எல்லோருடைய கைகளிலும் இருக்கின்ற கைபேசிகளின் மூலம் கூடச் சந்தைப்படுத்தலை




யும் உற்பத்தித் தொழில்நுட்பத்தையும் அறிந்து கொள்வதற்கான அத்தனை வாய்ப்புகளும் கிடைக்கின்றன.

இல்லையென்றும் முடியாது என்றும் முடங்காதிருப்போமென்றால் நமது பொருளாதாரத்தைச் சகலவழிகளிலும் நாங்கள் தக்க வைத்துக்கொள்ளலாம்.

இன்று பல தவறான முன்னுதாரணங்களை விடுத்து இளம் சமுதாயத்தினரை நல்வழியில் நடாத்துவதற்கு இத்தகைய கைவினை மற்றும் தொழில்சார் பயிலரங்குகள் அவசியமாக இருக்கின்றன. இளைஞர்களிடத்திலும் தொழில் வாய்ப்பு பற்றி இருப்பவர்கள் இடத்திலும் இத்தகைய கலைத் திறன்களை வளர்த்து அவர்களது ஆர்வத்தை திசை திருப்பிவிட்டால் போதும். நமது சமூகம் ஒரு சரியான திசையிலேயே பயணிக்கத் தொடங்கி விடும். தற்போது நாடெங்கிலும் கிடைக்கின்ற மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு விதம்விதமான எத்தனையோ அஞ்சல் முறைகள் வந்திருக்கின்றது. அவைகளை பயன்படுத்தி நாடெங்கிலும் உள்ள விதவிதமான மூலப் பொருட்களை பெற்றும், நமது அருகிலேயே நம்மைச் சுற்றிக் கிடைக்கக் கூடிய பொருட்களை பயன்படுத்தியும் புதிய சிறிய தொழில்களை ஆரம்பிக்கலாம். புதிய விடயங்களுக்கு இப்போது சந்தை வாய்ப்பு மிக அதிகமாக இருக்கின்றது. உங்களது திறமைகளை நீங்கள் இடம் கண்டு கொண்டால் சிறு கைத்தொழில் அமைச்சின் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கான தொழில் வழிகாட்டல்களை வழங்குவதோடு உங்களது தொழிலை விருத்தி செய்வதற்கான இதர விடயங்களுக்கும் ஆதரவளிப்பார்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஏதாவது ஒரு தொழிலைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகின்றது. அந்த வகையிலே ஆரம்பிக்கப்பட்ட எனது இந்த பயணம் எனது பாடத்தெரிவு, வாழ்க்கைச்சூழல், தொழில் என்று ஒரே கோட்டில் மிகவும் மகிழ்ச்சிகர மாக சுழன்று கொண்டிருக்கிறது.

உண்மையிலேயே நேர்த்தியாக ஒரு தொழிலைச் செய்யத் தெரிந்தவர்கள் எத்தனை இடர்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் சவாலோடு முன்னேறும் தைரியசாலிகளாகவே இருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு நான் சொல்ல விரும்புவது உங்கள் கண்களை அகலத் திறந்து பாருங்கள் உங்களுக்கான தொழில்களும் திறமைகளும் கொட்டிக் கிடக்கின்றன. சரியான பாதையில் நீங்கள் பயணிக்கும் போது உங்களது தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பான எந்த விடயங்களிலும் உங்களுக்கு கரம் கொடுப்பதற்குச் சிறு கைத்தொழில் அமைத்து அலுவலர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள வளங்களை பயன்படுத்துவோம் பிரதேசப் பொருளாதார நலன்களைப் பாதுகாப்போம்.




# மனை(வி)

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“இடம்பட வீடெடேல்” இது ஆத்திசூடி. ஒருவாழும் மனை அதாவது வீடு நிலத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும். வீடுகளை அமைக்கும் முன்னர் அந்த இடம் வீடுகட்ட ஏற்ற இடமா என்பதை முதலில் அறிந்து, இங்கு தனக்கான கடும்பத்துடன் வாழ போதுமானதாக இருக்குமா? என்பதையும் தெரிந்து கொண்டு வீடெடுக்க வேண்டும்.

சுடலை, பள்ள நிலம், பாடசாலை அல்லது கோவிலுக்குத் தெற்கே, பாழடைந்த மனைகள் எனப் பலவிடயங்களை வைத்து வீடுகட்டத்தோதற்ற நிலம் எனப் பெரியவர்கள் ஒதுக்கி வைப்பார்கள். இதெல்லாம் ‘முந்தியொரு காலம் மூத்தண்ணர் இருக்கும்’ காலம் என அடிபட்டுப் போயிற்று.

இப்போது குளங்களையும் அதாவது பள்ள நிலங்களையும் சுடலைகளையும் மக்கள் பெருமளவில் ஆக்கிரமித்து வீடு கட்டிக் குடியேறியுள்ளார்கள். அதைவிட பட்டினங்களிலும் நகரங்களிலும் வீடுகள் எந்தவகையில் நிலம் கிடைத்தாலும் கட்டடமாகக் கட்டி விடுகிறார்கள். அதற்கு வாசல் வழி திக்குத்திசை என எதுவும் கிடையாது.

மனிதர்களின் வாழ்விடங்களை எப்படி அமைக்க வேண்டும்? என்பதற்கான விதிமுறைகள் இருந்தாலும் எல்லோரும் நினைப்பது போல அது வாஸ்து சாஸ்திரம் எனப்படும் ஜோதிடம் அல்ல. அதற்குள் பொதிந்துள்ள அறிவுறுத்தல்கள் அனைத்தும் அறிவியலே ஆகும்.

உதாரணமாக முருங்கை மரத்தின் நிழல் முற்றத்தில் சாயக்கூடாது என்பார்கள். அதாவது வீட்டிற்குள் முருங்கை மரத்தை தொட்டழையும் காற்று நுழையாது. இதே போல வீட்டின் முற்றத்தில் என்னென்ன மரங்களை நடலாம் எது எதை நடக்கூடாது என்பது விதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக கோங்கு விளா, புளி, முருக்கு என்பவை வீட்டருகே நிற்கக்கூடாது என்பார்கள். காரணம் முருங்கை, புளி, போன்ற மரங்கள் காற்றிலிருந்து அதிகப்படியான நைதரசனை உறிஞ்சிக் கொள்ளும். இதனால் அங்குள்ள மனிதர்களுக்கு சுவாசிக்கும் காற்றில் நைதரசன் குறைவாகவே இருக்கும்.

குறிப்பாக முருங்கை, முள்முருக்கு போன்றவற்றின் பட்டைகளில் சிறு சிறு குருணிகளாக இந்த நைதரசன் பருக்கள் போலத் தெரியும். இரவில் நித்திரையில் சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். அதற்கு இந்த நைதரசன் குறைபாடே காரணம். குறைவான நைதரசனைச் சுவாசிப்பவர்களுக்கு கைகால் உளைவு, சலிப்பு

உற்சாகமின்மை ஏற்படும். இதனால் அவர் தொட்டதற்கெல்லாம் மற்றவர்களிடம் எரிந்து விழுவார்கள். பின்னே அயலவர்களை விட்டுவைப்பார்களா? தொட்டதெற்கெல்லாம் சீறிச் சினந்து பகையாக்கி கொள்வார்கள். பின்னே சோதிடம் என்ன சொல்கிறது. இந்த மரங்களின் நிழல் முற்றத்தில் சாய்ந்தால் ஆரோக்கியம் குன்றும். பகை வளரும். வறுமை வரும். அவ்வளவு தான். இதிலொன்றும் அதிசயமில்லை.

வீடு கட்டும்போது அடுக்களை அதாவது சமையலறை எங்கிருக்க வேண்டும். கிழக்கு அல்லது வடக்குப் பக்கம் இருக்க வேண்டும். வடக்கு நோக்கியிருந்து சமைக்கும் பெண் எப்போதும் நோயாளியாக இருப்பாள். நமது நாட்டில் வீசும் காற்று சோழகம். அடுத்துக் கச்சான் இரண்டுமே தெற்கிருந்து வடக்காகவும், மேற்கிருந்து கிழக்காகவும் வீசும். விறகடுப்பிலிருந்தே சமைக்கும் பெண்கள் அடுப்பிலிருந்து தீ பரவுவதாக இருந்தால் அடுப்பிலிருந்து தீ பரவக் காற்று எதிர்நிற்காது. விரைவாக அணைத்து விடலாம். எனவே அடுப்பு மூட்ட வேண்டிய திசை வடக்குக் கிழக்காகும் இன்றைய அடுப்புகளுக்கும் இதுவே விதியாகிறது.

மா, பலா, வாழை, மாதுளை, சிவப்பு பூக்களைத்தரும் பூமரங்கள் (செம்பருத்தி ரோஸ்) போன்றவை முற்றத்தில் நடுவது சிறப்பு. அதிகமாக மல்லிகைப் பந்தல் வைப்பதும் உண்டு. மனையும் மனைவியும் ஒருவருக்குப் பொருந்தி வருவது அபூர்வம் என்பார்கள்.

இடம் பட வீடெடேல் என்ற கதைக்கு இப்போது வருவோம். வாழுகின்ற வீட்டுக்கு முற்றம் மிக அவசியம். அதே போல புழக்கடை எனப்படும் பின்புறம் அது கோடிப் பக்கம் எனப்படும். அதுவும் அவசியம். பண்டைக் காலத்தில் நாங்கள் மண் வீடுகளில்தான் வாழ்ந்தோம். அதைக்கூட வேய்வதற்கு வசதியாக அடுக்களை தனியே ஒரு கொட்டில். மால் எனப்படும் கொட்டகை முன்னாக அமைத்து வீடும் அதனருகே சிறு அறையைக் கூடம் என்ற பெயரில் அமைத்து வாழ்ந்தோம். அனைத்தும் மண்ணால் முட்டச்சுவர் வைத்து கட்டினாலும் மால் மட்டும் அரைச் சுவருடன் விடப்படும். அது பலரும் வந்து கதையாடும் இடமாகவும், விசேடமான நிகழ்ச்சிகளுக்கான இடமாகவும் அமையும்.

மண்ணால் கட்டிச் சாணமிட்டு மெழுகி அழகாக வைத்திருக்கும் திண்ணைகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும். இந்த வீடுகளுக்கு என்ன செலவு. வெறும் உழைப்பு மட்டுந்தான் ஒருவர் வீடுகட்டும் போது கிராமத்திலுள்ள மற்றவர்களும் வந்து உதவி செய்வார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்ந்த சமுதாயம் அன்றிருந்தது. இன்று பக்கத்திலிருப்பவரைக்கூட யாரென்று அறியாமல் அறிய விரும்பாமல் நமது வேலைகளைப் பார்க்கிறோம்.

> இன்றும் சீமெந்து, மணல், கல் என்பவை கொண்டு வீடமைத்தாலும் அவைகளும் பெருமளவு மரங்களின் அழிவிலேயே நடக்கிறது. மணல் கொள்ளையை விட மரக்கொள்ளை மிக அதிகம். ஏனெனில் முன்னரைப் போல சாமானிய மக்கள் காடுகளுக்குச் சென்று மரங்களை வெட்ட முடியாது.

இந்தப் பழங்கால வீடுகளில் பெரிய பாதிப்பு அதைப் பாதிப்பு என்று அறியாமலே நடத்தியது இன்று உறைக்கிறது. ஆம் சாதாரணமாக ஒரு வீடு கட்டுவதற்கு நூற்றுக்கணக்கான மரங்கள் உயிரை விட்டன. அவற்றை நாம் விவசாயத்திற்காக அழித்த காடுகளிலிருந்து மட்டும் பெறவில்லை. தனியாகவும் மரங்களை வெட்டினோம். கப்பு, வளை, கைத்தடி, வரிச்சு எதுவானாலும் அது ஒரு மரமாகவே அழிந்தது. பெருமளவு காடுகளின் அழிவாகவே அந்த வீடுகள் எழுந்தன.

இன்றும் சீமெந்து, மணல், கல் என்பவை கொண்டு வீடமைத்தாலும் அவைகளும் பெருமளவு மரங்களின் அழிவிலேயே நடக்கிறது. மணல் கொள்ளையை விட மரக்கொள்ளை மிக அதிகம். ஏனெனில் முன்னரைப் போலச் சாமானிய மக்கள் காடுகளுக்கு சென்று மரங்களை வெட்ட முடியாது.

எனினும் பெருமளவு முதலாளிகளின் விற்பனைப் பண்டமாகக் காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. வைக்கோல் தென்னோலைக் கிடுகு என்பவை வீட்டை வேய்வதை நிறுத்திப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. அந்த வளமான பொருட்கள் இன்று தீயிட்டு அழிக்கப்படுகின்றன.

வீடுகட்டுவதற்கான மிக முக்கியமான பொருள் மண்தான். மரங்களுக்கு அடுத்த படியாக மண் தேவை. சுவர்வைத்து நிலம் உயர்த்தி மெழுகி திண்ணை போட்டு எல்லாம் மண்ணில்தான். அதை ஒரு கலையாகவே அன்றைய மக்கள் செய்வார்கள். வீடும் குழுகுழுவென்றிருக்கும். இன்றைய வீடுகளின் விசிறி சுற்றும்போதே வியர்வை கொட்டக்கொட்ட வாழ்வதைப் போல இல்லை.

இயற்கையோடமைந்த வாழ்க்கை. இந்த மண் வீடுகளிலிருந்து நாங்கள் ஓட்டு வீடுகளுக்கு மாறி, அதுவும் போய் கல்நார் வீடுகளுக்கு மாறி, இன்று அதையும் விடுத்துப் பிளாட் எனப்படும் தட்டு வீடுகளுக்கு மாறிவருகிறோம்.

இங்கோ முற்றம் இல்லை. கோடி இல்லை. நடு வீட்டுக்குள்ளேயே தேங்காய் அரைக்கும் சத்தம் கேட்டுக்கொண்டே மலங்கழிக்கிறோம். அதிலேயே குளிக்கிறோம். அன்றைய பணக்காரர் ஒருவர் தனது வளவுக்குள் மலசலகூடம் அமைத்த போது என் தந்தை "தரித்திரம்பிடிப்பான் வளவுக்குள்ள கக்கூசு கட்டுறான். உது நல்லதுக்கில்ல"என்றார். இப்போது அதை நினைத்தால் சிரிப்பு வருகிறது.

இப்போது இடம்படத்தான் வீடு கட்டுகிறார்கள். கிராம வாசிகள் கூட ஏக்கர் கணக்கில் நிலம் பரந்து கிடந்தாலும், ஒன்றன் மேல் ஒன்றாக மாடி கட்டவே விரும்புகிறார்கள் கட்டுகிறார்கள். ஒருவர் இருவர் வசிக்க பல அறைகள் வைத்து பெரிய வீடு கட்டுவது ஏனென்று எனக்குப் புரிவதில்லை. அதிலும் வெளி நாடுகளில் இருப்பவர்கள் இங்கு நிலம் வாங்கி ஆடம்பர மாளிகைகளைக் கட்டிவிட்டு மீண்டும் வெளிநாடுகளிலேயே வசிக்கிறார்கள். அதுவும் ஒரு மன நோயாகத்தான் தெரிகிறது. அப்படி ஏராளமான நிலங்களை இங்குள்ளவர்கள் விற்றுத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனை வாழ்வதற்கல்ல எமது பெருமைகளைப் பிறருக்கு தெரிவிப்பதற்குத்தான் எனச் சிலரும். இன்றும் தமக்கென ஒரு சொந்த வீடில்லாமல் பலரும் வாழும் வித்தியாசமான நாடு இது.



> “வியட்நாம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகளில் பலாப்பழங்களை உற்பத்தி செய்து சுளைகளாக பிரித்தெடுத்து அவற்றை டின்களில் அடைத்து மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள்.”

# லாபம் தரும் பலா பயிர்ச்செய்கை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



பலாமரத்தின் தாயகம் தென்கிழக்கு ஆசியாவாகும். பலா பூமத்தியரேகைப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

வெப்ப நாடுகளில் நன்கு வளரும் தன்மை கொண்டது.

முக்கனிகளுள் ஒன்று பலாப்பழம், மரத்தில் விளையும் பழங்களிலேயே பெரிய பழமாகும்.

பலாமரங்களில் மட்டும் இன்று வரை அதிக அளவில் நாட்டு ரகங்களே பயிரிடப் படுகின்றன. இந்தியா, பர்மா, இலங்கை, சீனா, மலேசியா, பிலிப்பைன்ஸ், பிரேசில், கென்யா ஆகிய நாடுகளில் வளர்கிறது.

இலங்கையில் பல மாவட்டங்களிலும் பலா பயிரிடப்பட்டாலும் வர்த்தக நோக்கத் திற்காகப் பெரிய அளவில் நடுகை செய்யப் படுவது மிக மிக குறைவு.

நாங்கள் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். பலா பயிர்ச் செய்கையானது இரண்டு மூன்று தலைமுறை வரை எமக்கு உற்பத்தியினை கொடுக்கும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

அத்தோடு வியட்நாம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகளில் பலாப் பழங்களை உற்பத்தி செய்து சுளைகளாக பிரித்தெடுத்து அவற்றை டின்களில் அடைத்து மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய



நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள்.

## பயிரிடும் முறை

பலாவானது ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரை நடவு செய்யப்படுகின்றது.

நீர்க் கட்டமைப்புச் சரியாக இருக்குமாக இருந்தால் எந்த மாதங்களிலும் நடவு செய்யலாம்.

வண்டல் மண், இருவாட்டி மண், செம் மண்ணில் பலா சிறப்பாக விளையும்.

இதில் செம்மண்ணில் விளையும் பலாப்பழங்களில் ருசி அதிகம் என ஒரு சில விவசாயிகள் கூறுகின்றார்கள்.

மணல் மண், கடல் மண், களிமண், கற்கள் நிறைந்த மண் போன்றவற்றில் பலா நடுகை செய்ய இயலாது.

காரணம் மரத்தின் வளர்ச்சியும் குறைவாக இருக்கும்.

விளைச்சலும் மிக மிகக் குறைவாக இருக்கும்.

பலா நடுகை செய்யும்போது நிலம் ஆழமாகவும், நல்ல வடிகால் வசதி உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

நிலத்தை நன்றாக உழுது பின்பு 2 அடி நீள அகல, ஆழம் உள்ள குழிகளை எடுக்க வேண்டும்.

விதைக்கன்றுகளாக இருந்தால் கன்றுகளுக்கு இடைப்பட்ட தூரம் 24 அடியாக வெளி இருக்க வேண்டும்.

ஒட்டு கட்டிய கன்றுகளாக இருந்தால் 18 அடி இடைவெளியில் நடுகை செய்ய வேண்டும்.

ஓர் ஏக்கரில் சாதாரணமாக விதைக் கன்றுகளாக இருந்தால் 72 கன்றுகள் நடுகை செய்யலாம்.

ஒட்டுக்கன்றுகளாக இருந்தால் ஓர் ஏக்கருக்கு 100 கன்றுகள் வீதம் நடுகை செய்யலாம்

பின்பு ஒவ்வொரு குழியிலும் செடிகள்



நடுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு நடவுக் குழியில் தொழுஉரம் அல்லது மண்புழு, உரம் ஆகியவற்றறைக் கொண்டு குழியை நிரப்பி, லேசாக தண்ணிர் ஊற்றி விட வேண்டும்.

பத்து நாட்கள் கழிந்த பின் கன்றுகளை நடவு செய்யலாம்.

பலா மரங்களைப் பொறுத்தவரை நோய்கள் தாக்குவது மிக மிகக் குறைவு. இதனால் தான் பலா பயிரகளுக்குக் கிருமி நாசினிகளின் பயன்பாட்டைக் குறைத்து உரம் மட்டும் கொடுக்கப்படுகின்றது.

காய் பிடிக்கும் நிறங்களில் சற்று கவனமாக இருக்க வேண்டும் காரணம் வடு பருவத்தில் துளைப் புழுக்களின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த இயற்கை கிருமி நாசினியான கற்பூரக் கரைசலை உற்பத்தி செய்து காய்கள் பிஞ்சாக இருக்கும் போதே ஒரு லிட்டர் கற்பூர கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து வாரத்தில் ஒரு தடவை காய்களில் நன்றாக படும் அளவிற்குத் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு ஒரிரு மாதங்களுக்கு செய்தால் போதும்.

விதைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற கன்றுகளாக இருந்தால் நல்ல காய்ப்புள்ள தாய் மரமாக இருக்க வேண்டும் அத்தோடு அம்மரத்தின் வயது குறைந்தது 20 வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

விதைகள் மூலம் உற்பத்தி செய்து நடுகை செய்யப்படுகின்ற கன்றுகள் ஐந்து அல்லது ஆறு வருடத்திற்குப் பிறகு காய்க்க ஆரம்பிக்கும்.



ஒட்டுமுறைக் கன்றுகளாக இருந்தால். விதை மூலம் உற்பத்தி செய்த கன்றை, நல்ல காய்ப்புள்ள 20 வருடத்திற்கு மேற்பட்ட தாய்மரத்தில் ஒட்டுக் கட்டி, நடவு செய்ய வேண்டும். இவ்வகைக் கன்றுகள் நான்கு வருடத்தில் காய்க்க ஆரம்பிக்கும்.

நடுகை செய்யும்போது இரண்டு அடி கன்றுகளைத் தேர்வு செய்து நடுகை செய்வதே சிறந்ததாக இருக்கும். நடுகை செய்து ஆறு மாதம் வரை

வாரம் 2 or 3 முறையும், அதன் பிறகு வாரம் ஒரு முறையும் தண்ணிர் ஊற்ற வேண்டும்.

இரண்டாவது ஆண்டுக்குப் பிறகு , 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மரம் ஒன்றிற்கு முதல் வருடத்தில் மக்கிய உரம் அல்லது மண்புழு உரம் 10 கிலோ இட வேண்டும். வருடா வருடம் ஒரு மடங்கு சேர்த்துக் கொடுக்க வேண்டும். ஆறு வருடங்களுக்குப் பிறகு ஒவ்வொரு மரத்திற்கும் வருடத்தில் ஒரு தடவை 50 கிலோ மக்கிய உரம் அல்லது மண்புளு உரத்தினை 2 கிலோ சாம்பல் கலந்து இட்டு, நீர் பாய்ச்ச வேண்டும்.

உரங்களை மே, ஜூன் மாதங்களில் ஒரு முறையும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஒரு முறை என இரண்டு முறை பிரித்து இட வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் மரத்தின் காய்ப்புத்திறன் அதிகரிக்கும்.

செடிகள் வளரும் வரை களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மரங்களுக்கு நன்கு சூரிய ஒளி கிடைக்குமாறு அடர்த்தியாக இருக்கும் பக்கவாட்டு கிளைகளை வெட்டிப் பராமரிக்க வேண்டும். பலா பயிர்ச்செய்கையை பொருத்தவரை இதற்கு ஊடுபயிராக வேறு நீண்ட கால பயிர்கள் எதையும் பயிரிட இயலாது.

மாறாக நடுகை செய்ததில் இருந்து ஐந்தாண்டு வரை ஊடுபயிராக தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றைப் பயிரிடலாம்.

ஏனைய பல மரங்களைப் போன்று அல்லாமல் பலாவானது மரத்தின் அடிப் பகுதி மாத்திரம் அல்லாமல் நிலத்திற்கு மேல் தெரியும் வேர்களிலும் காய் பிடிக்கும் தன்மை உள்ளது. பலா காய் பிடிக்க ஆரம்பித்த பிறகு

காய்கள் வடு பருவத்தில் இருக்கும் போது ஒவ்வொரு கொத்திலும் இரண்டு காய்களை விட்டு. ஏனைய காய்களை அகற்றி விட வேண்டும்.

ஒரு கொத்தில் இரண்டு காய்கள் மட்டும் இருந்தால் தான் நல்ல தரமான பெரிய பழங்கள் கிடைக்கும். இதனால். எம்மால் உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்களுக்குச் சந்தையில் கேள்வி அதிகமாக இருக்கும்.

மாறாகக் காய்கள் சிறியதாக இருந்தால் விற்பனை செய்வது மிக மிகக் கடினமாக இருக்கும்.

நல்ல விளைச்சலாகக் கருதுவதாக இருந்தால் ஒவ்வொரு பழமும் குறைந்தது 10 கிலோவுக்கு மேல் இருக்க வேண்டும். ஒரு சில விவசாயிகள் 30 தொடக்கம் 40 கிலோ வரையிலான பழங்களை அறுவடை செய்வதும் உண்டு.

### அறுவடை

ஒவ்வொரு கொத்திலும் உள்ள காய்களுக்கு மேல் உள்ள இலைகள் பழுத்து விழ ஆரம்பித்தால். அந்தக் காய்கள் முற்றும் நிலையினை அடைந்து விட்டது என்று அர்த்தம்.

காயில் உள்ள முள்ளை வெட்டி பார்த்தால் தண்ணீர் போன்ற திரவம் வர வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் காய் அறுவடைக்கு தயாரான காய் ஆகும். பால் போன்ற திரவம் வந்தால் அந்த காயைப் பறிக்க கூடாது.

காயில் உள்ள முட்கள் நன்கு அகன்று விரிந்து இருக்கும் நிலையை அடைந்த பின் அறுவடை செய்யலாம்.

காய்க்க ஆரம்பித்ததில் இருந்து முதல் மூன்று வருடத்திற்குச் சிறிய அளவிலான விளைச்சலைக் கொடுக்கும். அதன் பிறகு ஒரு வருடத்தில் ஓர் ஏக்கரில் இருந்து 40 டன் பழங்களை பெறலாம்.

ஊடு பயிராக உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி நிலக்கடலை போன்ற தானியங்களை முதல் ஐந்து வருடத்தில் பயிரிடலாம்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

0770239784 - WhatsApp:0769196445

# நிதி இலக்குகளை அடைய உதவும் முக்கியமான மூன்று அம்சங்கள்!

"நிதி இலக்குகளை நிர்ணயித்த பிறகு, அதை அடைவதற்கான விரிவான நிதித் திட்டமிடலை வகுப்பது இன்றியமையாததாகிறது. நிதித் திட்டமிடல் என்பது நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகளை எவ்வாறு அடையப்போகிறோம் என்பதைக் கோடிட்டுக் காட்டும் செயல்முறைத் திட்டமாகும்."



- வீ.இராமகிருஷ்ணன் -

நீண்ட காலத்துக்கு நம்முடைய நிதி நிலை வலுவாக இருக்க வேண்டும் எனில், அதற்குச் சரியான நிதி இலக்குகளை நிர்ணயித்துத் திட்டமிடுவது மிகவும் இன்றியமையாத ஒன்று. நிதி இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டால் தான் தனிநபர்கள் அதை நோக்கித் தெளிவான திசையில் தங்களது முதலீட்டுப் பயணத்தை முன்னெடுக்க முடியும். இதன்மூலம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தைத் திறம்பட பயன்படுத்துவதை உறுதிசெய்யவும் முடியும்.

நிதி இலக்குகளை நிர்ணயிப்பது, அதற்கேற்ப நிதித் திட்டத்தை வகுத்துக் கொள்வது, அவ்வாறு வகுக்கும் திட்டங்களைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்வதன் முக்கியத்துவம் ஆகிய மூன்றையும் இப்போது பார்ப்போம்.

## நிதி இலக்குகளை நிர்ணயித்தல்

வலுவான நிதித் திட்டமிடலுக்கான அடித்தளத்தைக் கட்டமைக்க நிதி இலக்குகளை நிர்ணயிப்பதுதான் முக்கியமான முதல்படி ஆகும். அதற்கு முதலில் ஒவ்வொருவரும் தங்களின் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதித் தேவைகளை அடையாளம் காண்பதில் இருந்து தொடங்க வேண்டும்.

அவசர கால நிதியை உருவாக்குதல், கடனைத் திரும்பச் செலுத்துதல் அல்லது விடுமுறைக் கொண்டாட்டத்துக்கு சேமிப்பது ஆகியவை குறுகிய கால இலக்குகளுக்கான உதாரணங்கள் ஆகும்.

அதே போல, ஓய்வூதியத்துக்காக முதலீடு செய்வது, சொந்த வீடு வாங்குவது, குழந்தைகளின் கல்விச் செலவுக்குத் தேவையான நிதியைச் சேர்ப்பது ஆகியவை நீண்ட கால இலக்குகளுக்கான உதாரணங்கள் ஆகும்.

நிதி இலக்குகளை நிர்ணயிப்பதற்கு முன், ஐந்து விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. இதுதான் இலக்கு எனத் திட்டவட்டமாகக் குறிப்பிடக் கூடியதாக இருக்க வேண்டும்.
2. அந்த இலக்கு அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும்.
3. இலக்கு அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.
4. இலக்கு நம்முடைய சூழலுக்கு ஏற்றதாகவும் தேவையான தாகவும் இருக்க வேண்டும்.
5. இலக்கை எட்டுவதற்கான காலத்தைக் கணக்கிடக்கூடியதாக இருக்க வேண்டும்.

உதாரணமாக, "பணம் சேமிக்க வேண்டும்" என்பது போன்ற மேம்போக்கான தெளிவற்ற இலக்கை நிர்ணயிப்பதைவிட, "இரண்டு ஆண்டுகளுக்குள் வீடு வாங்க சுமார் 30 லட்சம் முன்பணமாகச் சேர்க்க வேண்டும்" என ஸ்மார்ட்டாக இலக்கை நிர்ணயிக்க வேண்டும். இத்தகைய தெளிவு தொடர்ந்து இலக்கை நோக்கிக் கவனத்துடன் செயல்பட ஊக்குவிக்கும்.

ஒருவர் அடுத்த ஆறு மாதங்களில் ரூ. 2,50,000 அவசரகால நிதிக்காகச் சேமிக்க வேண்டும் எனத் திட்டமிடுகிறார். இது அவருக்கு ஒரு தெளிவான இலக்கை தருகிறது. மேலும், இலக்கு நோக்கிச் செயல்படுவதற்கான காலக் கெடுவையும் வழங்குகிறது. அது மட்டுமல்லாமல், தொடர்ந்து சேமிப்பதற்கும், செலவுப் பழக்கங்களில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஊக்கப்படுத்துகிறது. இதன் மூலம், திடீர் வேலை இழப்பு ஏற்பட்டால் இந்த அவசரகால நிதி பாதுகாப்பு அரணாகச் செயல்படும் என்றும், புதிய வேலை கிடைக்கும் வரை வீட்டுச் செலவுகளைச் சில மாதங்கள் சமாளிக்க உதவும் என்றும் அவருக்குத் தெரியவரும்.

## நிதித் திட்டமிடலை வகுத்தல்

நிதி இலக்குகளை நிர்ணயித்த பிறகு, அதை அடைவதற்கான விரிவான நிதித் திட்டமிடலை வகுப்பது இன்றியமையாததாகிறது. நிதித் திட்டமிடல் என்பது நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகளை எவ்வாறு அடையப்போகிறோம் என்பதைக் கோடிட்டுக் காட்டும் செயல்முறைத் திட்டமாகும். இதில் நம்முடைய தற்போதைய நிதி நிலைமையை மதிப்பிடுவது, வருமான ஆதாரங்களை அடையாளம் காண்பது, செலவுகளைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் பணத்தைத் திறம்படச் சேமிக்கவும், முதலீடு செய்யவும் மற்றும் மேலாண்மை செய்யவும் தேவையான உத்திகளை வகுப்பது ஆகிய அனைத்தும் அடங்கும்.

ஒரு சிறந்த நிதித் திட்டமிடல் என்பது வரவு செலவு பட்ஜெட் போடுவதில் ஆரம்பித்து, கடன் மேலாண்மை, காப்புறுதி, வருமான வரித் திட்டமிடல் மற்றும் முதலீட்டு உத்திகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்ட

தாக இருக்க வேண்டும். மேலும், தனிநபரின் ரிஸ்க் எடுக்கும் திறன், கால அவகாசம் மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் இயைந்துபோக வேண்டும்.

தனிநபர்கள் பெரும்பாலும் தங்களுக்கான நிதித் திட்டமிடலைத் தாங்களே வகுத்துக்கொள்வதற்கான திறன்களைக் கொண்டிருப்பதில்லை என்பதால், இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் உதவியை நாடுவது எப்போதுமே சிறந்தது. அவர்கள் தங்களின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தின் மூலம் தனிநபர்களுக்கு நிதிச் சார்ந்த முன்னுரிமைகளைப் புரிய வைப்பதுடன், பண மேலாண்மையில் தெரியாத மற்றும் தவறவிடும் உண்மைகளைச் சுட்டிக்காட்டி, இதன் மூலம் சிறந்த திட்டமிடலை வகுக்க உதவுகிறார்கள்.

பணவீக்கம், இலக்கின் தற்போதைய மதிப்பு மற்றும் இலக்கின் எதிர்கால மதிப்பு ஆகியவை நிதித் திட்டமிடலை வகுக்கும் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்களாகும். காரணம், பணவீக்கம் என்பது காலப்போக்கில் பணத்தின் வாங்கும் சக்தியைக் குறைத்து விடுகிறது. எனவே, காலப்போக்கில் விலைவாசி உயர்வு எவ்வளவு அதிகரிக்கலாம் என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ப நம் இலக்கின் மதிப்பு சரி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

பணவீக்கம் மற்றும் கால அளவைக் கருத்தில்கொண்டு ஓர் இலக்கின் எதிர்கால மதிப்பைத் தீர்மானிப்பதுதான், அதை அடைவதற்கான நிதித் திட்ட மிடல்களைச் சரியாக வகுக்க உதவுகிறது. எஸ்.ஐ.பி (Systematic Investment Plans -SIP) முறையிலான சேமிப்புப் பழக்கமானது நாம் அடைய விரும்பும் இலக்கை அடைவதற்கான நிதித் தொகுப்பை உருவாக்கப் பயன்படும் மிகச் சிறந்த கருவி ஆகும். ஏனெனில், அவை ஒழுங்கான மற்றும் தொடர்ச்சியான முதலீட்டுப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள உதவுகின்றன. எஸ்.ஐ.பி முதலீட்டின் கூட்டு வளர்ச்சிச் சக்தியானது தனிநபர்களுக்குக் காலப் போக்கில் செல்வத்தைக் குவிக்க உதவுவதோடு, தங்களின் நிதி இலக்குகளைத் திட்டமிட்டபடி அடைந்து வெற்றி பெறவும் உதவுகிறது.

நடுத்தர வயதையுடைய ஒரு தம்பதி தங்களுடைய நீண்டகால கனவான சொந்த வீடு வாங்கும் இலக்கை அடைவதற்கான நிதித் திட்டமிடலை வகுக்க விரும்பினர். உடனே குறிப்பிட்ட காலத்தில் அதற்கான பணத்தைச் சேர்ப்பதற்கான முதலீட்டுத் திட்டங்களை முடிவு செய்வது குறித்து அவர்களுக்குத் தெரிந்த நிதி ஆலோசகருடன் ஆலோசனை நடத்தினர்.

இறுதியாக, மாதாந்தர வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குதல், தேவையற்ற செலவுகளைக் குறைத்தல் மற்றும் வருமானத்தில் ஒரு பகுதியை வீடு வாங்குவதற்கான முன்பணத்துக்காக ஒதுக்கி சேமித்தல் உள்ளிட்ட முறையான நிதித் திட்டமிடலை வகுத்துக்கொண்டனர்.




இவை மட்டுமல்லாமல் அவசரகால நிதி, குழந்தைகளின் கல்விக்கான பணத் தேவை, விடுமுறை காலச் செலவுக்கான நிதி, ஓய்வூதியத்துக்கான நிதித் திட்டம் ஆகியவற்றையும் நிதித் திட்டமிடலின் ஒரு பகுதியாகச் சேர்த்து, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் திட்டமிடலை செய்வதற்கும் நிதி ஆலோசகர் ஒருவர் உதவினார்.

### திட்டமிடலை மதிப்பாய்வு செய்தல்

நிதித் திட்டமிடல் என்பது ஒரு முறையோடு முடிந்துவிடும் விஷயமல்ல் குறிப்பிட்ட கால இடைவெளியில் மறு ஆய்வு செய்வதும், தேவையான மாற்றங்களைச் செய்வதுமென அது தொடரக்கூடிய விஷயமாகும்.

நம்முடைய நிதி இலக்குகளை நோக்கிய பயணத்தில் முதலீடுகளையும், உத்திகளையும் தொடர்ந்து மதிப்பீடு செய்வதும், நம்முடைய நிதித் திட்ட மிடல்கள் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்பப் பொருந்தக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதும், இலக்குகளை எட்டுவதில் எந்தத் தடைகளும் இல்லாமல் பார்த்துக் கொள்வதும் அவசியம்.

முக்கியமாக, வாழ்க்கையில் நடக்கக்கூடிய திருப்புமுனை நிகழ்வுகளான திருமணம், வேலை மாற்றம் அல்லது எதிர்பாராமல் வரக்கூடிய நிதிச் சவால்கள் போன்றவை நம்முடைய ஆரம்பத் திட்டமிடலில் மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவையை உருவாக்கலாம்.

எனவே, நிதித் திட்டமிடலை மதிப்பாய்வு செய்வதன்மூலம் தனிநபர்கள் தங்களின் சேமிப்புகள், முதலீடுகள் மற்றும் கடன் குறைப்பு நடவடிக்கைகளை இலக்கிலிருந்து விலகாத வகையில் திட்டமிட்டுக்கொள்ள முடியும்.

மேலும், காலப்போக்கில் நிதித் திட்டமிடல்களில் இருக்கக்கூடிய சாத்தியமான இடைவெளிகளைச் சரி செய்யவும் அல்லது புதிய வாய்ப்புகளை அடையாளம் கண்டு பயன்படுத்திக்கொள்ளவும் மதிப்பாய்வு உதவுகிறது. மேலும், நிதித் திட்டமிடலை மதிப்பாய்வு செய்வது நாம் மேற்கொள்ளும் முதலீட்டின் செயல்திறனை மதிப்பிடவும், சந்தைச் சூழல்களுக்கு ஏற்பத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்குமான வாய்ப்பை வழங்குவதாகவும் இருக்கிறது.

உதாரணமாக, ஓய்வுக்கால தேவைக்காக பணம் சேர்க்கும் நிதித் திட்டத்தை விடா முயற்சியுடன் பின்பற்றிவரும் ஒருவர், ஒவ்வொரு 12 மாதத்துக்கும் திட்டமிடலை மதிப்பாய்வு செய்கிறார். காலப்போக்கில் மாறிவரும் தன்னுடைய ரிஸ்க் எடுக்கும் திறன் மற்றும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தன்னுடைய திட்டத்தை மறுசீரமைத்துக் கொண்டு வருகிறார். அதாவது, அவருடைய இலக்கை எட்டுவதற்கான நோக்கத்தில் எந்தக் குறைபாடும் ஏற்படாத வகையில் தன்னுடைய முதலீட்டு ஒதுக்கீட்டில் மாற்றங்களைச் செய்வதோடு, வருமானத்தை அதிகப்படுத்தும் சந்தை வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்கிறார். இதன்மூலம் ஓய்வுக்காலத்துக்கான தொகுப்பு நிதியை உருவாக்கும் பாதையில் அவரது திட்டமிடல் தொடர்ந்து பயணிப்பதை உறுதி செய்து கொள்கிறார்.

நிதி இலக்குகளை நிர்ணயித்தல், அதற்கான நிதித் திட்டமிடலை வகுத்தல் மற்றும் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்தல் ஆகிய மூன்றும் நிர்ணயித்த இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கான அடிப்படை அம்சங்களாகும்.

தெளிவான மற்றும் புத்திசாலித்தனமான இலக்குகளை நிர்ணயிப்பதும், அதற்கான விரிவான திட்டமிடலை வகுப்பதும், அந்தத் திட்டமிடலானது இலக்கிலிருந்து விலகாமல் இருக்க மதிப்பாய்வு செய்து தேவையான மாற்றங்களைச் செய்வதும் தனிநபர்கள் தங்களின் நிதி இலக்குகளை அடைவதற்கான பாதையில் முன்னேறிச் செல்வதை உறுதி செய்கின்றன.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், தனிநபர்கள் தங்களின் நிதி நிலையைத் திறம்பட நிர்வகிக்கவும், நிதி சார்ந்து சரியான முடிவுகளை எடுக்கவும், மற்றும் இறுதியாக நிலையான மற்றும் வளமான நிதி எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளவும் முடியும்.

# நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்பு நிலை கால்நடை மருத்துவத்தின் நிலைப்பாடு




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல நாடுகளில் மனித சுகாதாரத்தில் சவால் விடும் நுண்ணுயிர் கொல்லிகளின் பாவனை தடை செய்யப் பட்டுள்ளபோதும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இன்றும் ஆபத்தான மனித சுகாதாரத்தில் செல்வாக்குச் செலுத் தும் நுண்ணுயிர்க் கொல்லிகள் விலங்கு மருத்துவத்தில் பாவிக்கப்படுவதைப் பரவ லாக அவதானிக்க முடிகிறது.


விலங்குகளில் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புக்குரிய காரணிகள்

பெரிய பண்ணைகளில் [mega farms] நோய் சிகிச்சை மட்டுமின்றி வளர்ச்சி ஊக்கியாகவும் நோய் தடுப்பாகவும் காணப் படும் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனை.

பண்ணையாளர்கள் தமது அனுமா னத்தின் அடிப்படையில் தமது விலங்குக ளுக்கு நுண்ணுயிர்க் கொல்லிகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனை இன்றி பாவித்தல்.

சக்தி மிக்க நுண்ணுயிர்க் கொல்லிகள் சகல இடங்களிலும் கிடைத்தல் [விலங்கு உணவுக் கடைகள் தாராளமாகத் தமது வாடிகையாளர்களுக்கு கடுமையான நுண்ணுயிர்க் கொல்லிகளை விற்பது அவதானிக்கபட்டுள்ளது.]

சட்ட விரோத சிகிசையாளர்களின் செயற்பாடு. [கால்நடை மருத்துவர் தவிர்ந்த இதர கால்நடை மருத்துவ அலுவலக ஊழியர்கள், செயற்கை முறை சினைப்படுத் துனர்கள் சிகிச்சை செய்வது அவதானிக்க பட்டுள்ளது.]




சில மருந்து நிறுவனங்கள் பண்ணை யாளர்களுக்கு நேரடியாக மருந்துகளை வழங்குதல்.

மீள் பெறுகை காலம் [withdrawal period] சரியாகக் கடைபிடிக்கப்படாமல் சிகிச்சை அளிக்கப்பட்ட விலங்குகளின் முட்டை,பால் ,இறைச்சி பொதுமக்களுக்கு விநியோகிக்கப் பாடல்.

நுண்ணுயிர்க் கொல்லிகளின் கலப் படத்தைக் கொண்ட பண்ணைகளின் கழிவுகள், குடிநீர் மற்றும் காய்கறித் தோட் டங்களை மாசுபடுத்தல்..

இலங்கை போன்ற நாடுகளில் கால் நடை துறையில் நுண்ணுயிர்க் கொல்லிக ளின் பாவனையை விற்பனையை தடுப் பது தொடர்பான நடைமுறை சாத்தியமான இறுக்கமான சட்ட நடைமுறைகள் இல் லாமை.

கால்நடைகளில் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பை தடுப்பது எவ்வாறு முடிந்தவரை பண்ணைகளைச் சுத்தமாகவும் சுகா தாரமாகவும் வைத்திருத்தல்.

நோய் நிலைகளுக்குச் சட்ட விரோத சிகிச்சையாளரை நாடாமல் கால்நடை மருத்துவரை அணுகுதல்.

சுய மருத்துவத்தைத் தவிர்த்தல்.


நுண்ணுயிர் கொல்லிகள் பாவிக்கப்பட்ட விலங்குகளின் உற்பத்திகளை அவற்றின் மீள்பெறுகை காலத்தின் பின்னரே விற் பனை மற்றும் பாவனைக்குப் பயன்படுத் தல்.

விலங்குணவுக் கடைகள் மற்றும் இதர கடைகளில் கிடைக்கும் சக்திமிக்க ஆபத் தான நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவ னையை ஒழுங்கு படுத்தல். வைத்தியரின் பரிந்துரையின்றி விற்பதைத் தடுத்தல். மீறுபவர்களுக்கு தண்டனை அளித்தல். விற்பனை உரிமங்களை இரத்துச் செய்தல்.

பாடசாலை மட்டம் முதல் சகல பொது மக்களுக்கும் இது தொடர்பாக விழிப்பு ணர்வு அளித்தல்.

விலங்குகளுக்கு நோய் ஏற்படும் போது கால்நடை மருத்துவர் மூலம் முறையான ஆய்வுப் பரிசோதனை செய்து சரியான மருந்தைச் சரியான அளவில் சரியான கால அளவுக்கு முழுமையாக வழங்கு வதோடு தேவையற்ற மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

# How does antibiotic resistance occur?




பல நோய்கள் சிகிச்சை அளிக்கத் தேவை யற்றவை. விலங்குகளின் நோய் எதிர்ப்பு சக்தி மூலம் தானாகவே சரியாகி விடும். அவ்வாறான நோய்களை நுண்ணுயிர்க்கொல்லி மூலம் சிகிச்சை செய்ய தேவை இல்லை.

சில நோய்களுக்கு இயற்கை மூலிகைகள் மற்றும் பொருட்கள் மூலம் சிகிச்சை அளிக்கலாம் . அவற்றுக்கு ஆரம்ப நிலையில் நுண்ணுயிர்க் கொல்லிகள் தேவைப் படாது. [உதாரணம் வயிறு ஊதுதலின் ஆரம்ப நிலை] எனினும் . கால்நடை வைத்தியரின் பரிந்துரையுடன் இவற்றை செய்தல் சிறப்பானது.

பல நோய்கள் ஒரே மாதிரி அறிகுறிகளைக் காட்டுவதால் தன்னிச்சையாக வழமையான மருந்துகள் மூலம் சிகிச்சையா ளிக்காது கால்நடை மருத்துவரின் மூலம் சிகிச்சை செய்வது பொருத்தமானது..

உசாத்துணை -

Antibiotic use in food animals ; Indian over view, ReAct Asia-pacific , Christian medical college , vellore, tamil nadhu, india.2018

Antibiotic – growth promoters in feed animals. Peter hughs and John heritage, division of microbiology, school of biochemistry and bio chemistry, university of leeds

Antimicrobial resistance [AMR] current situation and practical problems, srilanka medical associaltion newsletter November 2016. Dr.kushali jeyathilake, consultant microbiologist sri. jeyawardanapura, GH, Nugegoda.

Drivers, dynamics and epidemiology of antimicrobial resistance in animal production FAO publication, B.A.Wal l , A.Matous, L.Marshal and D.U.Pieffer 2011

உழவர் வாழ்வியலில் கால்நடை மருத்துவ அறிவியல் பன்னாட்டு கருத்தரங்கு மலர். 2019

கால்நடைக்கதிர் - தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மாதாந்தச் சஞ்சிகை

கோழி நண்பன் - சஞ்சிகை

(முற்றும்)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



குறும்படப் போட்டி 2023

தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் "தமிழர் பொருண்மியம்" வார இதழ், ஓகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னிட்டு நடத்தும் குறும்படப்போட்டி.

» குறும்படங்கள் ஒவ்வொன்றும் 3 நிமிடத்திற்கு குறையாமலும் 8 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
» குறும்படங்கள் எமது பொருளாதாரத்தைப் பேசுவதாக அமைதல் வேண்டும்.
» வேறு எந்த இடங்களிலும் வெளியிடப்படாததாகவும், யாரையும் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.
» நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
» உங்களைப் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 20.07.2023
» உங்கள் குறும்படங்களை HD தரத்தில் Google Drive வில் பதிவேற்றம் செய்து கீழ்காணும் மின்னஞ்சலுக்கு. முழுமையான விபரங்களோடு அனுப்பிவைக்க வேண்டும்: Tamilseconomy@gmail.com

முதல் பரிசு - ரூபா 25,000
2ஆம் பரிசு - ரூபா 15,000
3ஆம் பரிசு - ரூபா 10,000

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 0777276949



# பகுத்துண்டு

வேதநாயகம் தபேந்திரன்



> அறப்பண்பு என்பது சக மனிதனைப் போசிப்பது மட்டுமல்ல எமது சூழலில் வாழும் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கேற்ற நிலையை உருவாக்குவதாகும். எமது முன்னோர்கள் இதற்காகத் தான் விரத நாள்களில் வாழையிலையில் படைத்த உணவின் ஒரு பகுதியைக் காகத்திற்கு வைத்த பின் உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

அந்த வளவில் இரண்டு மாமரங்கள். மரம் நிறையக் காய்கள் காய்த்துக் குலுங்கின. காணியின் உரிமையாளர் வயதில் மூத்தவர். நன்கு முற்றிச் சாம்பல் பூத்த காய்களைப் பிடுங்கிக்கொள்வார்.

அங்கொன்று இங்கொன்றாக மரத்தில் காய்கள் தெரிந்தன. அவற்றை அவர் பிடுங்க மறந்து விட்டாரோ என நினைத்து அவரிடம் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே "தம்பி அணில், கிளி போன்ற உயிரினங்கள் பசியாற அவற்றை விட்டு விட்டேன். ஆறறிவு படைத்த மனிதன் எல்லாவற்றையும் உண்டால் இந்த உயிரினங்கள் உயிர் வாழ்வது எப்படி? நாம் வாழும் பூமியின் சமநிலை இந்த உயிரினங்களின் வாழ்விலும் தான் தங்கி உள்ளது" என்றார்.

உண்மை. யாவும் உண்மை. இப்படியான தர்ம சிந்தனை உள்ள ஒரு பரம்பரை முன்னாளில் இருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றும் உள்ளனர்.

இந்தப் பூமியானது அதில் பிறந்த அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானது. இதன் வளங்கள் அனைத்து உயிரினங்களும் உண்டு உறங்கி வாழ்வதற்குரியவை.

ஆனால் துரதிஸ்டவசமாக ஆறறிவு படைத்த மனிதன் அனைத்தையும் கட்டி ஆளுகிறான்.

சக மனிதனையே வஞ்சித்துத் தான் மட்டும் நன்றாக வாழ வேண்டுமென நினைக்கும் மனிதன் எப்படி ஏனைய உயிரினங்களை நேசிப்பான்?

அறப்பண்பு என்பது சக மனிதனைப் போசிப்பது மட்டுமல்ல எமது சூழலில் வாழும் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கேற்ற நிலையை உருவாக்குவதாகும். எமது முன்னோர்கள் இதற்காகத் தான் விரத நாள்களில் வாழையிலையில் படைத்த உணவின் ஒரு பகுதியைக் காகத்திற்கு வைத்த பின் உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

வீட்டில் நாய், பூனை போன்ற உயிரினங்களை வளர்த்தார்கள்.

ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களை வருவாய்க்கு மட்டுமன்றி வீட்டுச் சூழலில் உள்ள இலைகுழைகளை உண்ணக் கொடுத்து அவை உயிர்வாழ உதவினார்கள்.

இயற்கையின் சமநிலை குழம்பாமல் பூமியில் மனிதன் நோய் நொடியின்றி வாழ அனைத்து உயிரினங்களும் தேவை. பிற உயிர்கள் வாழ நாம் உதவும் போது தான் எமது சூழல் சுத்தமாக இருக்கும். சமநிலையும் இருக்கும். வெய்யில், மழை, காற்று, பனி, குளிர் போன்ற பருவ காலங்களும் ஒழுங்காக வரும்.

காலநிலை மாற்றம் தொடர்பான அக்கறை 1992 ஆம் ஆண்டு பிறேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ மகாநாடு முதல் 2021 ஸ்கொட்லாந்தின் மகாநாடு வரையில் பேசப்பட்டு வருகிறது.

ஆனால் பூமியின் சமநிலையைப் பாதிக்கும் காலநிலை மாற்றம் தொடர்ச்சியாகவே நிகழ்ந்து வருகிறது.

மனிதன் மரம் செடி கொடிகளுக்கும், பூமியின் தரைத் தோற்றத்திற்கும், பிற உயிரினங்களது வாழ்க்கை வட்டத்திற்கும் ஏற்படுத்தும் இடையூறு தொடர்ந்து நடைபெறுகிறது.

1500 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்த ஐரோப்பியரின் நாடு பிடிக்கும் படலம் ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்ட நாடுகளின் சமநிலையைப் பெரிதும் குழப்பி விட்டது.

எமது சங்க காலத்தில் மாதம் மும்மாரி பொழிந்ததாகப் பாடல்களில் காண்கிறோம். ஆனால் இன்று வருடத்தில் மூன்று மாதம் பருவமழை ஒழுங்காகப் பொழிந்தால் அதனைப் பெரும் சாதனையாகக் கொண்டாட வேண்டி உள்ளது.

காடழிப்பு, பயிரழிப்பு, சக பிராணிகளின் உயிரழிப்பு என்பவை பூமியின் சமநிலையைத் தொடர்ச்சியாகவே குழப்பி வருகின்றன.

சக உயிரினங்களுக்கு உணவளித்துத் தானும் உண்ணும் பழக்கத்தை மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத் தான் உலகப் பொதுமறை தந்த வள்ளுவனும்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என ஈரடியால் கூறி உள்ளான்.

### 5. கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் திருவிழா பாரம்பரிய இசை, நடனம் மற்றும் தலைமுறை தலைமுறையாக கடந்து வந்த சடங்குகளைக் காட்சிப்படுத்துகிறது. பலதரப்பட்ட பார்வையாளர்களை ஈர்ப்பதன் மூலம் இவ்விழா இலங்கைக் கலாச்சாரத்திற்கான விழிப்புணர்வையும் பாராட்டுதலையும் கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும் புரிதலையும் வளர்க்கிறது.

இந்தக் கலாச்சார ஊக்குவிப்பு கலாச்சார சுற்றுலா வளர்ச்சிக்குப் பங்களிப்பதோடு நாட்டின் தனித்துவமான பாரம்பரியத்தை அனுபவிப்பதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இதன் விளைவாக இலங்கையில் கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் கலாச்சார சுற்றுலாவின் நிலையான வளர்ச்சிக்கு இந்தத் திருவிழா ஓர் ஊக்கியாக செயல்படுகிறது.

### 6. வருவாய் உருவாக்கம்

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவின் பொருளாதார நன்மைகள் சுற்றுலா மற்றும் உள்ளூர் வர்த்தகத்தின் உடனடித் தாக்கத்திற்கு அப்பாற்பட்டது. இந்தத் திருவிழா பல்வேறு வழிகளில் அரசாங்கத்திற்குக் கணிசமான வருவாய் ஈட்டுகிறது.

* முதலாவதாகத் திருவிழாவின் போது அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை சுற்றுலா தொடர்பான வரிகள் மற்றும் கட்டணங்கள் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிக்க வழிவகுக்கிறது. ஹோட்டல் வரிகள், போக்குவரத்து வரிகள் மற்றும் பாரம்பரியத் தளங்கள் மற்றும் இடங்களுக்கு நுழைவுக் கட்டணம் ஆகியவை இதில் அடங்கும். அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரி வருவாயில் பங்களித்து, அதிகரித்த வசூலாக மொழி பெயர்க்கிறார்கள்.

* இரண்டாவதாக, ஸ்பான்சர்ஷிப் / அனுசரணை மற்றும் விளம்பரங்கள் மூலம் திருவிழா வருவாய் ஈட்டப்படுகின்றது. இந்த நிகழ்வு பிரபலமடைந்து அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதால், வணிகங்களும் நிறுவனங்களும் தங்கள் வியாபாரக் குறிகளை / பிராண்டுகளைத் திருவிழாவுடன் இணைக்க ஆர்வமாக உள்ளன. ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் அல்லது விளம்பரப் பொருட்கள் போன்ற நிகழ்வின் வெவ்வேறு அம்சங்களுக்கு அவர்கள் நிதியுதவி செய்கின்றனர். இந்த ஸ்பான்சர்ஷிப் ஒப்பந்தங்கள் விழா ஏற்பாட்டாளர்களுக்குக் கணிசமான வருவாயை வழங்குவதோடு ஒட்டுமொத்தப் பொருளாதார தாக்கத்திற்கும் பங்களிக்கின்றன.



* கூடுதலாக, இந்தத் திருவிழா உள்ளூர் கைவினைஞர்கள் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்த ஒரு தளமாக செயற்படுகிறது. சமயப் பொருட்கள், பாரம்பரிய உடைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையானது விற்பனையாளர்களுக்கு மட்டுமல்லாது வரிவிதிப்பு மூலம் அரசாங்கத்திற்கும் வருமானத்தை ஈட்டுகிறது. இந்தத் திருவிழாவானது இந்தப் பொருட்களுக்குச் சாதகமான சந்தையை உருவாக்கி உள்ளூர்ப் பொருளாதாரத்தை உயர்த்தி, கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கிறது.

* மேலும், திருவிழாவின்போது அதிகரித்த பொருளாதார நடவடிக்கை உள்ளூர் பொருளாதாரத்தில் செலவினங்களைத் தூண்டுகிறது. பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள், போக்குவரத்து, ஷாப்பிங் மற்றும் பல்வேறு சேவைகளுக்கு பணம் செலவழிக்கிறார்கள். இந்தச் செலவினம் உள்ளூர் பொருளாதாரத்திற்குள் பரவுவதோடு வணிகங்களுக்கான வருமானத்தை உருவாக்குகிறது மற்றும் பெறுமதி சேர் வரி (VAT), சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (SSCL) மற்றும் ஏனைய விற்பனை வரி போன்ற மறைமுக வரிகள் மூலம் வரி வருவாய்க்குப் பங்களிப்பு செய்கிறது.

* மேலும், யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்ட நேர்மறையான பிம்பமும் நற்பெயரும் நீண்டகாலப் பொருளாதார தாக்கங்களைக் கொண்டுள்ளது. இந்தத் திருவிழா எதிர்கால சுற்றுலாத் துறைக்கு ஊக்கமாகச் செயற்படுகிறது, மீண்டும் வருகைகளை ஊக்குவிக்கிறது மற்றும் ஆண்டு முழுவதும் புதிய பார்வையாளர்களை ஈர்க்கிறது. இப்பகுதியில் சுற்றுலாவின் நீடித்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், வருமானம் ஈட்டுதல் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பல வழிகளில் கணிசமான பங்களிப்பை வழங்குகிறது. திருவிழாவின் தாக்கம் அதன் கலாச்சார மற்றும் மத முக்கியத்துவத்திற்கு அப்பாற்பட்டது, உள்ளூர் மற்றும் தேசிய அளவில் பொருளாதார நன்மைகளை உருவாக்குகிறது.

அதிகரித்த சுற்றுலா, உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம், வேலை உருவாக்கம், உட்கட்டமைப்பு மேம்பாடு, கலாச்சார மேம்பாடு மற்றும் அரசாங்கத்திற்கு வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஊக்கியாகச் செயல்படுகிறது. சுற்றுலாவை ஊக்குவிக்கவும், பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், ஒரு பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சமூகப்பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தவும் கலாச்சார நிகழ்வுகளின் திறனை இது காட்டுகிறது.

இத்தகைய பண்டிகைகளின் பொருளாதார நன்மைகளை அங்கீகரிப்பதன் மூலமும் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை உந்துவதற்கு இலங்கை அதன் வளமான கலாச்சார பாரம்பரியத்தை மேலும் பயன்படுத்த முடியும்.

எனவே, சந்தர்ப்பங்களினை நல்ல முறையிலும், எமக்குச் சாதகமான முறையிலும் பயன்படுத்துவதன் மூலமாக இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் தனிநபர் வருமானத்தினை உயர்த்த முடிவதுடன் முழு இலங்கை நாட்டினையும் சிறந்த தன்னிறைவு பெற்ற செல்வந்த நாடாக வளர்ச்சி பெற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் திருவிழா ஒரு சிறந்த வாய்ப்பாக இருப்பதனால் நீங்கள் எல்லோரும் பயன் பெற வேண்டுகின்றேன்.

+94-777-802-900 /Email: swaminathan@agsarma.com



# எங்கட ஆச்சி

முந்தி எங்கடை ஆச்சி சைவத்துக்குப் புறம்பாயும் மச்சத்துக்குப் புறம்பாயும் ரெண்டு செற் பாத்திரங்கள் வைச்சிருப்பா. எல்லாம் அநேகமா மண் பாத்திரங்களாத்தான் இருக்கும். உந்த ரெண்டு செற்றும் ஒண்டோட ஒண்டு கலக்கப்படாது முட்டுப் படக்கூடாது எண்டதில ஆச்சி வலு கவனமா இருப்பா. தற்செயலா கலந்திட்டுது எண்டாலோ முட்டும் பட்டுட்டுது எண்டாலோ சன்னதம் ஆடுவா. அடுக்களைக்கு வெளியில ரெண்டு அட்டாளை போட்டிருக்கும். ஒண்டு மச்சப் பாத்திரங்கள் கழுவிக்கவிக்கிறதுக்கு எண்டும் மற்றது சைவச்சமையல் பாத்திரங்கள் கழுவிக்கவிக்கிறதுக்கு எண்டும் இருக்கும். உந்த மச்ச அட்டாளைக்குப் பக்கத்தில மீன் இறைச்சி வெட்டிற அருவாளும் ஒரு பக்கமாத் தலையைச் சரிச்சு வைச்சு போதை வருத்தக்காரப் பெடியள் மாதிரிப் படுத்திருக்கும். அடுக்களைத்



தாவாரத்து இறப்பில தற்செயலா மழை பெஞ்சாலும் அடுப்பு மூட்டுறதுக்கு நனையாம இருக்கிறதுக்கெண்டு காங்குமட்டை கொக்கறை பன்னாறை, கருக்கு மட்டையெல்லாம் அட்டியாகக் கட்டித் தூக்கி இருக்கும்.

அடுப்பு குந்தி இருந்து மூட்டுறமாதிரித்தான் இருக்கும். உப்பிடி குந்தி இருக்கிறதால இடுப்பு கைகால் மூட்டுகளுக்கு வயிறு முதுகு கை கால் தசையளுக்கு நல்ல பயிற்சி மூட்டு வருத்தங்கள் ஒண்டும் வராது. அதுகும் குந்தி இருந்து குனிஞ்சு குனிஞ்சு அடுப்பு ஊதினால் வயிறு வளந்து வண்டி வைக்காது எண்டு ஆச்சி சொல்லுவா. அதிலும் பிள்ளைத்தாச்சிப் பெண்டு



**- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -**

கள் உப்பிடி குந்தி இருந்து சமைச்சினம் எண்டால் ஒரு கரைச்சலும் இல்லாம வெட்டாம கொத்தாம காசுச் செலவு இல்லாமல் நல்ல சுளுவாப் பிள்ளைப்பேறலாம் எண்டு சொல்லுவா.

வெள்ளிக்கிழமை விரதநாட்கள் எண்டால் ஆச்சி குசினி திண்ணையெல்லாம் சாணி போட்டு மெழுகி குளிச்சுத் தோஞ்சு போட்டுத்தான் உலை வைப்பா. சாணி ஒரு நல்ல கிருமிநாசினி எண்டது கன பேருக்குத் தெரியாது எண்டுவா .ஆச்சி ஒவ்வொரு நாளும் காலமை அடுப்பு மூட்டேக்கை அப்பா பிள்ளையாரப்பா எண்டு கும்பிட்டுப்போட்டுத்தான் தொடங்குவா. அதாவது சமையலையும் ஒரு தெய்வீகமான செயலாப் பாக்கிற பண்பு அப்ப எங்கடை ஆக்களிட்டை இருந்தது. இப்ப எல்லாம் பெண்டுகள் டீவீயை ஆவெண்டு பாத்துக்கொண்டு இல்லாட்டில் போனைக் காதுக்கை வைச்சு புளுகிக்கொண்டுதான் அடுப்பு மூட்டுவினம். உந்த முசுப்பாத்தியளாலை கறிக்கு ரெண்டு மூண்டு தரம் உப்புப் போடுற சங்கததியள் எல்லாம் நடந்து அடிபிடி கோடு கச்சேரி போலிசு எண்டு திரியிற கன சம்பவங்கள் இண்டைக்கு நடந்து கடைசியிலை டிவோசிலை போய் நிக்குது. உதுகள் எல்லாம் இல்லாமல் இருக்க வேணும் எண்டு போட்டுத்தான் எங்கடை ஆக்கள் சமையலையும் ஒரு கலை எண்டு சொல்லி அதைக் கவனமாச் செய்ய வேணும் எண்டவங்கள் எண்டுவார் எங்கடை அப்பு.

அடுப்பு மூட்ட வளவுக்கை விழுகிற கொக்கறை, பன்னாறை இல்லாட்டில் காவோலையை எல்லாம் பொறுக்கி எடுத்தந்து பாவிச்சுப் பிறகு எரிக்கிறதுக்கு கருக்கு மட்டை, காங்குமட்டை இல்லாட்டில் காஞ்ச பூவரசம் கதியால் துண்டுகளைப் பாவிப்பா. உப்பிடி வளவுக்கை குனிஞ்சு நிமிந்து விறகு பொறுக்கிறது எல்லாம் நல்ல பயிற்சி எண்டுவா ஆச்சி . ஆனால் ஒண்டு பால் காய்ச்சேக்கை மட்டும் பசுவின்ரை முலைக் காம்பு வெடிச்சுப்போடும் எண்டு கருக்கு மட்டை பாவிக்கமாட்டா.

மண்பானை சட்டியிலதான் ஆச்சி சோறு கறி சமைப்பா. மண்சட்டியிலைதான் பால் காச்சுவா. உந்த மண்பாத்திரங்களிலை சமைச்சால் ஒரு தனி உருசை வரும். அதை அனுபவிச்சவைக்குத்தான் உது விளங்கும். அதிலையும் மண் சட்டியில சுண்டக்காய்ச்சிற பால் தேவாமிர்தம் எண்டுதான் சொல்ல வேணும். பால்காச்சின சட்டியை சுரண்டித்தின்னிறதில இருக்கிற சுகம் எவ்வளவு பெரிய சுகம். உந்தப் பால் சட்டி சுரண்டிறதுக்கெண்டு சின்னன் பொன்னன் எல்லாம் சண்டை பிடிக்கும். உதுகளின்ரை கரைச்சல் தாங்கேலாம சில வீடுகளில ஆரார் எப்ப எப்ப சுரண்டலாம் எண்டு ரேர்ண் வைச்சிருப்பினம்.

பழஞ்சோறு கறியளை மண்சட்டியில போட்டுக் குழைச்சு எடுத்து உருட்டி உருட்டி ஆச்சி பூவரசம் இலையிலை தாற அந்தச் சாப்பாட்டின்ரை உருசை எங்கயும் வராது. பிறகு உந்த குழைச்ச சட்டியை வழிச்சு நக்கிறதுக்கும் பெரிய போட்டா போட்டி நடக்கும். அதை அப்பிடியே விரலால வழிச்சு நக்கிறதில வாற திருப்தி வேற ஒண்டிலையும் வராது. நாகரீகம் எண்ட பெயரில உந்த அடுக்களையின்ரை இடத்தை சீமெந்துக் குசினியளும் மண் அடுப்புகளை காஸ் அடுப்புகளும் குக்கர்களும் மண்சட்டி பானையை அலுமினியமும் எவர்சில்வரும் ஆக்கிரமிக்க எங்கட சமையல் முறையளும் உணவு முறையளும் உறவு முறையளும் மாறமாற எங்களை விதம்விதமான வருத்தங்கள் ஆக்கிரமிச்சுப் போட்டுதெண்டுதான் சொல்ல வேணும்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2023இல் வெளியிடப்பெற்றது.